


# சிவத் தமிழ்

## ஆன்மீகக் காலாண்டிதழ் 2005

உன் திருமுகத்தைப் பார்க்கின்றேன்
பின்னே மஞ்சள் ஒளிவட்டம்
தெரியவில்லை
கனிவான கரங்களை கண்டேன்
திரிசூலமோ அங்கில்லை
முன்னே இரு பாதங்களும் தெரிந்தன
தங்கத் தாம்பாளத்தில் பாதம் பதியவில்லை
இருந்தும்...
முற்று முழுதாய் நோக்கினேன்
துர்க்கா துரந்தரியே - நீ
தூரத்தில் இல்லை

- நிலாமகள்









பிரதம ஆசிரியர்

"கலைஞானமணி" கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முத்துவிழாச் சிறப்பிதழ்

"சிவத்தமிழ்ச்செல்வி" "துர்க்காதுரந்தரி"
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்
முத்துவிழாச்சிறக்க எங்கள் வாழ்த்துக்கள்

# AYNGARAN VIDEO GERMANY

Tel:0231 18 59 352 Fax:0231- 18 59 480

*AYNGARAN*
*VIDEO*
*GERMANY*

**நீங்கள் தேடிக்களைத்த, புதிய, பழைய திரைப்படங்கள்**
**நியாயமான விலையில்**
**(DVD,VIDEO CD CD,MP3,VHS & AUDIO CASSETTE)**
மிகமிக மலிவு விலையில் அனைத்து மளிகைப் பொருட்களும்.
உலகம் முழுவதும் குறைந்த கட்டணத்தில் பேசிட மலிவான
**தொலைபேசி அட்டைகள்.**
தமிழ் ஹிந்தி திரைப்படங்கள் நேரடியாக வாடகைக்கும் - தபால் மூலம்
வாடகைக்கும், விற்பனைக்கும் பிரதிகள் அனுப்பிவைக்கப்படும்.
**35 யூரோவிற்குமேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்புக் காத்திருக்கிறது.**

**Rheinische str.83**
**44137 Dortmund**
**Germany**

# சிவத் தமிழ்

அன்பே சிவம்! சிவமே தமிழ்!!

தை - மாசி - பங்குனி

மலர் 2 2005 இதழ் 3



பிரதம ஆசிரியர்
**கலைஞானமணி**
**கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்** B.F.A

உதவிச் சித்திர ஆசிரியர்
**கவிச்சித்திரா சுகந்தினி சுதர்சன்**

கௌரவ ஆசிரியர்
**கலாநிதி கவிஞர் வி.கந்தவனம்**
**திரு.பொ.கனகசபாபதி**
(முன்னாள் அதிபர் மகாஜனாக்கல்லூரி)

**இலக்கியச் செம்மல் இந்துமகேஷ்**

சிறப்பு ஆசிரியர்
**கலாநிதி வானதி தேசிங்குராஜா**

**மக்கள் தொடர்பு**
யேர்மனி
**ஆன்மீகத்தென்றல் த.புவனேந்திரன்**
Röntgen Str.6
58239 Schwerte - Germany
Tel:02304-82811
கனடா
**திரு.கதிர் துரைசிங்கம்**
106 Chester Le Bivd Unit 40
Scarborough ON M1W 2X9
Canada

**வெளியீடு**
**Dr.M.K.S.Sivakumaran.B.F.A**
Postfach 2765
58477 Lüdenscheid
Germany


## இனிய சங்கமம்





**சிவத்தமிழ்ச் செல்வி**
**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**

"இந்தச் சரீரம் நமக்குக்கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்". என்கின்றார் நாவலர் பெருமான்.
அதேபோல் "சிவத்தமிழ்" எமக்குக்கிடைத்தது நாம் வாழும்போதே நல்லவர்களை வாழ்த்தி வணங்கும் பொருட்டேயாம். இதனால் வாழ்தலும் வாழ்த்தலும் சிவத் தமிழுக்கும் பொருந்தும்.
இறந்த காலங்கள் நமக்குப் பாடமாகலாம்.
நிகர்காலங்கள் நாளைய வாழ்வின் ஆத்தமாகலாம்.
எனவே நிகர்காலத்தில் நிகரில்லாத் தொண்டினை சைவத்திற்கும் தமிழுக்கும் புரியும் துர்க்காதுரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களின் சிறப்பிதழாக, முத்து மலராக அவரது எண்பதாவது பிறந்தநாளில் (07.01.05) மலர்கிறது சிவத்தமிழ்.
இது என்னால் ஆனது அல்ல, அவனருளால் அவன்தாழ் வணங்கிப் பெற்ற பேறு இது.
கொடுத்துவைத்தவர் என்ற சொல்லுக்கு அவர் அவர் எண்ணங்களின் ஈடேற்றத்தைப் பொறுத்து பொருள் அமையும்.
சிவத்தமிழின் மூன்றாவது இதழ் இப்பெரும் பேறு பெற்றது என்றால் சிவத்தமிழ் கொடுத்து வைத்தது அல்லவா!
மேலும் இவ்விதழினை தயாரிக்க உதவிய திருமதி Dr.வாணி சிவராஜன் ( இலங்கை) அவர்களுக்கும். கட்டுரைகளையும், கவிதைகளையும் அன்னைமீது மலரெனத்தூவி மணம்பரப்பிய அன்பர்களுக்கும், சிவத்தமிழ் சிறப்பிதழ் பற்றிய செய்தியினைப் பிர சுரித்த "அருள்ஒளி" சஞ்சிகைக்கும், கையெழுத் துக்களை கணனியில் ஏற்றி உலக வலம்வர உதவிய திருமதி லோகேஸ்வரி தில்லைராஜா அவர் களுக்கு சிவத்தமிழின் நன்றிகள்.
எல்லாப் பக்கமும் பரந்து மணம் பரப்பும் சிவத் தமிழ்ச் செல்வியின் இதழ் இது என்பதால், உங் களை விரைவாக நுகர வழிவிடுகின்றேன். சிவத்தமிழ் உங்கள் வாழ்விற்கு சீரிய வழி காட்டுவதாக.

அன்புடன்
**மு.க.சு.சிவகுமாரன்**

**சிறுவர் பக்கம்**

*ஆனால் பெரியவர்களுக்கும்*

# அன்புக்கு அடிமையான வேடன்

பால்யா என்ற வேடன் இரண்டு வகைக் காரியங்களைத்தான் செய்து கொண்டு இருந்தான்.

தன் முன்னால் வரும் எந்த மிருகங்களையும் கொல்வான்.

அதைச் சுட்டுத் தின்பான். இதுதான் அவன் வாழ்க்கை.

ஒரு நாள் வில்லை எடுத்துக்கொண்டு வேட்டைக்குக் கிளம்பினான். அவன் எதிரில் சிறிதும் பயமில்லாமல் தம்புராவை மீட்டிக் கொண்டு "நாராயணா நராயணா"என்ற மகா மந்திரத்தை ஓதிக்கொண்டு ஒருவர் வருவதைப் பார்த்தான்.

அவரைக் கொல்வதற்கு வில்லில் நாண் ஏற்றி அவரைக் குறிபார்த்தான்.

அந்த மனிதரோ சிறிதும்கூடப் பயப் பிடாமல், அமைதி குலையாமல் பரிவும் கருணையும் பொங்கும் பார்வையுடன் அவனை நோக்கி வந்துகொண்டிருந்தார்.

அவருடைய விரல்கள் தம்புராவை மீட்டிக் கொண்டிருந்தன.

வாய் நாராயணா நாராயணா என்ற மந்திரத்தை ஜபித்துக்கொண்டு இருந்தது.

பால்யா தன் வாழ்நாளில் இத்தகைய காட்சியைக் கண்டதேயில்லை.

அவனையும் அவன்கையில் இருக்கும் வில்லையும் அம்பையும் பார்த்தால் பயந்தோடும் பிராணிகளைத்தான் அவன் இதுநாள் வரை பார்த்திருக்கின்றான்.

இல்லாவிடில் தன்மீது பாய்ந்து தன்னைக் கொல்லவரும் கொடிய பிராணிகளைத்தான் பார்த்திருக்கின்றான்.

ஆனால்,

நாரதரோ அமைதியாக அன்பு ததும்பும் பார்வையுடன், கருணை பொங்கும் குரலுடனும் நாராயண மந்திரத்தை ஓதிக்கொண்டு அவனிடத்தில் சிறிதும் பயமின்றி வந்து கொண்டிருக்கிறார்.

பால்யாவினால் தன்கையில் இருக்கும் வில்லில் பூட்டிய நாணை இழுத்து அவர்மீது அம்பைவிட முடியவில்லை.

அவரைப்பார்த்து வியந்து நிற்கின்றார்.



"உன் அம்பு ஏன் நின்றுவிட்டது". பால்யா என்று அன்பு ததும்பக் கேட்கின்றார் நாரதர். தங்கள் அமைதியைப்பார்த்து.

நாரதருடைய அன்பும் அமைதியும் கொடிய வேடனின் தன்மையை மாற்றிவிடுகின்றது. இது எப்படி அவரால் முடிந்தது.

நாரதர் பால்யாவைத் துஷ்டகுணமுடைய வேடனாகப் பார்க்கவில்லை. அவனையும் நாராயணனாகவே பார்க்கின்றார். அவன் உள்ளிருந்து அவனை இயக்கும் இறைவனையே அவனிடம் அவர்காண்கின்றார்.

அந்தக் கொடிய வேடனுக்கு நாராயணா மந்திரத்தை உபதேசிக்கின்றார்.

அவனை மகாத்மாவாக உயர்த்தி விடுகின்றார்.

அந்தப்பால்யா என்னும் வேடன்தான் அழியாத இலக்கியத்தைப்படைத்த, உலக மகாகாவியமான இராமாயணத்தை உருவாக்கிய மகான் வால்மீகி முனிவர்.

**நீ உன்னை நேசிப்பாய் என்றால்**
**உன்னால் பிறரையும் நேசிக்கமுடியும்.**
**உன்னை இயக்கும்,**
**உன்னுள்ளே சீவனாக இருக்கும்**
**அதே இறைவன் அல்லவா**
**பிறரிடமும் உள்ளிருக்கின்றான்.**

(கீதா போதகர் கிரிதாரி பிரசாத் அவர்கள் இயற்றிய "கீதைப்பேருரை" நூலில் இருந்து.)



# அருள் ஓவியம்

- நம்பிக்கைகொள். கடவுளை நம்பியிரு. பின்னர் நீயாக எதையுமே செய்யவேண்டியிராது. தெய்வமே உன்பொருட்டு நல்லவற்றைச் செய்யக் கைகொடுக்கும்.

- குழந்தையின் இயல்பு எவ்வளவு இனிமையானது.உலக இன்பங்களை எல்லாம் விட்டுவிட்டு அது ஒரு மரப்பாவையை வைத்துக்கொண்டு கொஞ்சும்.

- தாயே நான் பெரியவன், அவர்கள் தாழ்ந்தவர்கள் போன்ற கருத்துக்களை எல்லாம் என்னிடம் இருந்து அழித்துவிடுவாயாக. ஏனெனில் தாழ்ந்தவர் எனப்படும் அவர்களும் பல்வேறு உருவங்களில் உள்ள நீயே அன்றி வேறுயார்.

- பூமியில் நான்கு திக்குகளிலும் பிரயாணம் செய்தாலும் உண்மையான தர்மத்தை ஓரிடத்தும் நீ காணமாட்டாய். இருப்பதெல்லாம் உன் உள்ளத்திலேயே இருக்கிறது.

- மழைத் தண்ணீர் மேட்டு நிலத்தில் தங்கிநிற்பதில்லை.பள்ளமான இடத்திற்கு ஓடிவந்து விடுகிறது. அதுபோல் இறையருள்,தற்பெருமையும்,கர்வமும் உள்ளவர்களுடைய உள்ளத்தில் தங்கிநிற்பதில்லை. பணிவுள்ளவர்களின் உள்ளத்தில்தான் தங்கி நிற்கும்.

- வீடு கட்டும் போது சாரம் அவசியம்.ஆனால் வீடு கட்டி முடிந்த பின்னர் சாரத்தைத்தேடுவார் யாருமில்லை. அதுபோல ஆரம்பத்தில் உருவ வழிபாடு அவசியமாக இருக்கிறது.பின்னர் அவசியமற்றுப்போகிறது.

- குழந்தைகள் பிறக்கவில்லையே என்று சிலர் ஆறாகக் கண்ணீர் பெருக்குகின்றனர். சொத்துக்கள் சேரவில்லையே என்று வருந்தி உள்ளம் கரைகின்றனர்.ஆனால் அந்தோ கடவுளைக் காணவில்லையே என்று அழுவோர் எத்தனைபேர் உள்ளனர். வெகுசிலரேதாம்.

- துறவி ஒருவன் சர்வகாலமும் ஈசுவரனைச் சிந்திப்பதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் குடும்பஸ்த்தன் ஒருவன் தனது குடும்பப்பாரத்திற்கு மத்தியிலும் கடவுளை கருத்தில் வைக்கமுயல்வானாகில் அது பெரிதும் பாராட்டத்தக்கது.

- ஒருவன் எதனைத் தியானிக்கின்றானோ அதன் இயல்பே அவன் உள்ளத்திற்கு வருகிறது.

- புதிய தேசம் ஒன்றிற்குப்போகும் பொழுது, வழிதெரிந்த வழிகாட்டி ஒருவனுடைய சொற்படி செல்லவேண்டும். பலருடைய யோசனையைக் கேட்டு நடக்கத்தொடங்கினால் எல்லாம் குழப்பத்தில் போய் முடிவுறும். அவ்வாறே கடவுளை அடைய முயலும் விஷயத்திலும் நெறியறிந்த ஒரே ஒரு குருவின் புத்திமதியை அப்படியே பின்பற்றவேண்டும்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்



# தெய்வத்தின் நிழல்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

வழிபாடு வாழ்வைச் செம்மைப்படுத்தும். மனிதப் பிறவி எல்லாப் பிறவிகளிலும் உன்னத மானது. அப்பர் பெருமான் மனிதப் பிறவியே வேண்டுமென்று பாடினார். மண்ணில் நல்ல வண்ணம் வாழ சம்பந்தர் வழி காட்டியுள்ளார்.
ஆன்மபலம் பெற்ற அடியார்கள் காட்டிய வழியில் வாழ்வது சிறந்தது என்ற உண்மை யின் கோலத்தை நாம் நேரில் காணும் பெரு வாய்ப்புப் பெற்றுள்ளோம்.
இந்த நூற்றாண்டு தகவல் தொழில்நுட்ப நூற்றாண்டாய் மலர்ந்து நிற்கிறது.
விஞ்ஞானத்தின் விந்தையோடு மனம் ஒன்றிப் போய் நிற்கும் இளந்தலை முறைக்கு எடுத்துக் காட்ட ஒரு அன்பு வடிவம்.
அதுதான் துர்க்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி என்னும் பண்பின் உருவம்.
பெண்மையின் பேராற்றலைத் தாங்கிச் சைவப் பணிக்கே தன்னை முழுமையாகத் தந்து எண்பதாவது அகவையில் நிற்கும் அன்னையை நாம் எதிர்காலத் தலைமுறையினர்க்கு அறி முகம் செய்ய வேண்டிய பொன்னான வேளையிது. வழிபாட்டு நெறிநின்று வாழும் நிலையைக் காண விழைவோர் அன்னையை நாடிச்செல்கின்றனர். தெல்லிப்பளை துர்க்கை யம்மன் ஆலயப் பணியிலே ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு மேலாக இணைந்து நிற்கும் துர்க்காதுரந்தரியின் வாழ்வியல் எல்லோரும் புகழ்வது. துன்பம் தீர இடர் களைய இன்னல் போக இறைவழிபாடே நிலையான துணை யென்பதை அன்னை உணர்த்திநிற்கிறார்.
ஆசிரியப் பணி தந்த பயிற்சியும் தமிழ் மொழி தந்த வளமும் அவரைப் பேசும் பொற் சித்திரமாக்கின.
சிவத்தமிழ்ச் செல்வியாக மிளிரவைத்தன.
கடல் கடந்த நாடுகளில் எல்லாம் அவரது சிறந்த பேச்சாற்றலால் வழிபாட்டுநெறி, வாய் மொழி என்னும் அரிய ஊடக மூலமாக பரப்பப் பட்டது. சொல்லும் செயலும் ஒன்றிணைந்து கற்றபடி நின்ற அவர் வாழ்க்கை நெறி எல்லோ ரையும் அவர்பால் இணைத்தது.
அன்புநெறிவயப்பட்ட அவரது தலைமைத்துவம் அன்னையாக யாவரையும் அரவணைத்தது.
துர்க்கையின் நிறைவான அருள்மழை அவர்மீது நாளும் பொழிய அன்னையின் கரங்கள் கொடை நல்கும் பேறு பெற்றன. இன்று உலகெங்கும் வாழும் சைவத்தமிழ் மக்கள் இக்கொடைப்பணிக்கு வாரி வழங்கும் உதவும் கரங்களாக விளங்கு கின்றனர்.
காலம் எமக்கு ஒரு நல்ல கைவிளக்கைத் தந்தது. இறைபணிக்காக இல்லறம் துறந்து அரவணைப்புத் தேடும் பிஞ்சுகளை வளர்த்து ஆளாக்கும் தெய்வப் பணியையும் அன்னை தொடக்கியபோது மகளிர் வாழ்வு மலர புதிய வழியொன்று திறந்தது. துர்க்காபுரம் மகளிர் இல்லம் இன்று எதிர்கால இளந் தலை முறையினரை நன்னெறிப்படுத்தும் களமாக விளங்குகிறது. அன்னை தாயாக நின்று அவர் களைத் தாங்கிநிற்கிறார்.உயிராக நின்று பேணு கின்றார்.சைவ வாழ்க்கை தரும் சிறப்புக்கு அன்னையே சிறந்த எடுத்துக்காட்டு. சொற் காத்துச் சோர்விலாது அறம் செய்யும் தவச்செல்வி. பசி தீர்க்கும் பணியும் பண்பாடு பேணும் முறைமையும் வழிபாடு காக்கும் மரபும் அன்னையின் குணநலன்கள். குன்றில் இட்ட விளக்குப்போல நின்று ஒளிவீசும் அன்னையின் தோற்றமும் செயற்பாடும் நாம் பின்பற்ற வேண்டி யவை.
எதிர்காலத்தில் தமிழும் சைவமும் இணைந்த ஒரு வாழ்வை எல்லோரும் உணர துர்க்கா துரந்தரியின் எழுத்துக்கள் பணிசெய்யும். தான் உணர்ந்த ஆன்ம பலத்தைப் பிறரும் அறியத் தனது எழுத்துக்கள் மூலம் ஆற்றுப்படுத்தியுள்ளார். பலருக்கும் பயன்பட வாழும் முறைமையைக் காட்டிய அவரை வணங்குவது எமக்குப் பெருவாழ்வு தரும். அவரை நேரில் காண்பது மனநிறைவு தரும். பேசுவது பெருமை தரும். பழகுவது வளம் தரும். பயில்வது எல்லாம் தரும். புன்னகை யின் திருவோடு பொலியும் அவர் துன்பங்களை வென்றவர். சோர்வைச் சேரவொட்டாதவர். ஆரவாரத்தை விரும்பாதவர். அமைதியை நாடுபவர். அவர் தாரகை நடுவண் தண்மதி போல உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் மகளிரின் ஒப்பற்ற தலைவி என்றால் மிகையாகாது.
நெஞ்சக்கனகல் நெகிழ்ந்துருகப் பிஞ்சுக் கரங் களைப் பற்றி அவர் செல்லும்போது தெய் வத்தின் நிழல் தெரிகிறது. கோவிலின் கோபுர வாசலில் கூப்பிய கரங்களுக்கு நேரே அவர் தோற்றம் தரும்போது பெண்மையின் பேராற்றல் எம்மை வந்து தழுவி நிற்கிறது.
இனிய சொல்லால் எம்மை அவர் அழைக்கும் போது உள்ளம் மகிழ்ச்சியில் திளைக்கிறது.
இந்த இன்ப நிலைகளை உணர்ந்தோர் அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தம்மை மகிழ் விக்க வேண்டுமென இறைவனை வேண்டுவர்.
தெய்வமென்பதோர் சித்தம் உண்டாகி வாழ முனைவர்.பக்தி நெறிநின்று பார் சிறக்கப் பணி செய்வர்.

# உலக வரலாறு காணும் இந்து ஆலய மறுமலர்ச்சி

பொன் பாலசுந்தரம் - இலண்டன்

ஆதியும் அந்தமும் இல்லாததும் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முதல் மூத்த சமயமாகவும் இருந்த இந்து சமயம் வரலாற்று மாற்றத்தின் தாக்கத்தினாலும், சரித்திரச் சிதைவுகளினாலும் பூகற்ப இயற்கைக் கோளாறுகளினாலும் உலகெலாம் பரவி இருந்த நிலையை இழந்துவிட்டது என்று கூறலாம்.

முதற் கடவுளென்று போற்றப்பட்ட இந்துக்களின் கடவுளான சிவனும், வழிபாட்டு நியதிகளும், பக்திமார்க்கமும்,தியானத்தோடு தொடர்புடைய அனுட்டானங்களும், வாழ்க்கைத் தத்துவங்களும்- இவைபோன்ற மனித வாழ்வோடு சம்மந்தப்பட்ட பிணைப்பான நியதிகளும் உலகளாவிய நிலையிலிருந்து குறுகி இந்தியா, இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் நிலைகொள்ள பல காரணங்கள் இருந்துள்ளன.

அன்பே சிவம் என்ற அன்பு மார்க்கமும், இன்பத்தையும், துன்பத்தையும் தன் இதயத்தால் தாங்கிக்கொள்ளும் பக்குவமும், அல்லது பரந்த மன விரிசலும், அதன் கட்டுப்பாடற்ற போக்கும் பிறமதத்தவர்கள் இந்து சமய ஊடுருவல்களை தம் இஸ்ரப்படி நடத்த வாய்ப்பாய் அமைந்துவிட்டது. இந்துக்கள் பலவீனர்கள் என்ற எண்ணம் பரவ காலத்திற்குக்காலம் தம் இஸ்ரப்படி படைஎடுத்த பிறமதத்தினர் இந்துசமய ஆக்கிரமிப்பில் இறங்கினார்கள். என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன.



Yogyakarta **இல் கண்டுபிடிக்கப்பெற்ற இந்து ஆலயம்**

இதைத்தவிர போத்துக்கீசியரினதும்,பிரிட்டிஸ் சாம்ராஜ்யத்தினதும் கீழைத்தேச அக்கிரமிப்பாலும் இந்து சமயம் தனது ஆசியச் செல்வாக்கைக்கூட இழக்கவேண்டியிருந்தது.

இவர்களது ஆக்கிரமிப்பு இல்லாவிட்டால் மலேசியா, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், பர்மா, தாய்லாந்து உட்பட இன்னும் அனேக நாடுகளில் இந்து சமயம் விரிவான அளவில் நிலைகொண்டிருக்கும்.

இதேபோலவே முகமதியர்களின் படையெடுப்புக்களினால் மத்தியகிழக்கு நாடுகளான எகிப்து, ஈரான், மக்கா போன்ற நாடுகள் வரை பரவியிருந்த இந்துமதம் தாக்கத்துக்குள்ளானது. காலத்துக்குக் காலம் இவர்கள் நடத்திய படையெடுப்புக்களால் பெருமை வாய்ந்த இந்துக்கோவில்களும் அரிய இந்து சமய பொக்கிசங்களான மிகப்பழமைவாய்ந்த விக்கிரகங்களும் அழிக்கப்பட்டன.

இவற்றைத் தவிர ரஷ்யா, அமெரிக்கா வரையிலும் ஆசிய கலாச்சாரம் செழிப்பாகப் பரவி இருந்ததாகவும் அதுநாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென்றும் ரஷ்ய - அமெரிக்க தொல்பொருள் ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வில் கூறியிருக்கிறார்கள்.

ஆசிய மொழிகளிலும், கலாச்சாரத்திலும் நிபுணரான அமெரிக்க பென்ஸில்வெனிய பல்கலைக்கழக நிபுணர் விக்டர் மயர் என்பவர் ஆசிய மொழிகள் அக்காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த வரலாற்றிற்கு மதிப்புக் கொடுத்துள்ளார்.

### செப்பேடுகளில் எழுதும் பழக்கம் இந்துக் களிடம்தான் ஆரம்பத்தில் இருந்தஒன்று.


செப்பேடுகளில் எழுதும் பழக்கம் இந்துக்களிடம்தான் ஆரம்பத்தில் இருந்தஒன்று. இந்து ஆலய வரலாறுகள் செப்பேடுகளில் எழுதிவைக்கப்பட்டமை அந்தக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டமை இதற்குத் தக்கசான்றாகும்.

இவைகளை எல்லாம் நான் இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம் இந்து சமயம் இன்றைய சூழலில் ஒரு மறுமலர்ச்சிக் கட்டத்தை நோக்கி நடைபோடுகிறதா என்பதை மதிப்பீடு செய்வதற்காகவே. மறுமலர்ச்சி காணும் நிலையை அடைந்துவிடுமா என்பதே கேள்வி?

என்நாட்டவர்க்கும் இறைவனான சிவனை முற்காலத்தில் உலகமே வழிபட்டு வந்திருப்பதற்குச் சாட்சி சொல்வதுதான் என் நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்னும் தாரக மந்திரம். நாற்றிசையும், திக்கெட்டும் சேர்ந்ததுதான் எந்நாடும் என்பதாகும். கடலுக்குள் மறைந்துபோன குமரிக்கண்ட சரித்திரமும் மூன்று முறைகள் கடல் கொந்தளித்து இந்துக்களின் பெருமைவாய்ந்த இலக்கிய இலக்கண ஏடுகளைக் கடல் விழுங்கி அழிவை ஏற்படுத்தியவையும்கூட இந்துசமய விரிவுக்குப் பின்னடைவையே தந்தன.



எமது சமயத்தின் பாரம்பரியத்தை நோக்கு வோம். சில சரித்திரச் சுவடுகள் இவை:-
இலங்கையில் உள்ள தமிழர்கள் பிரதேசமான திருகோணமலையில் உள்ள பாடல்பெற்ற தலமான கோணேசர் ஆலயத்தைச் சூழ்ந்த கடலில் கண்டெடுக்கப்பட்ட மிகப்புராதனகால சிவலிங்கம் உட்பட உலகப்பிரசித்திபெற்ற ஆழ்கடல் சுழியோடி மைக் வில்சன் என்பவரின் அழ்கடல் கண்டுபிடிப்புக்களான இந்து புராதன விக்கிரகங்களும் அவற்றின் வரலாறு பற்றிய ஆராய்வாளர்களின் ஆய்வின்றி கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.



**மகாபலிபுரக் கோயில்கள்**

தமிழ்நாட்டில் கடல்விழுங்கியும் மீட்டெடுக் கப்பட்ட மகாபலிபுரக் கோயில்கள் கடல் ஆக் கிரமிப்புக்குச் சான்றுகள். கங்கைகொண்ட சோளபுரமும் ஒரு சரித்திர ஊர்ஜிதம்.
உலகரீதியில் இந்துசமய ஆதாரங்கள்- அமெரிக்காவிலுள்ள கொலராடோ மானிலத்தில் 10,000ம் ஆண்டுகள் பழமைவாய்ந்த சிவன் கோயிற் கட்டட அமைப்புக் கண்டுபிடிக் கப்பட்டமை, கத்தோலிக்கமத மக்கள் பெரு மளவில் வாழும் இத்தாலியில் புராதனகால சிவ லிங்கம் கண்டுபிடிக்கப்பட்டமையும், உலகின் பலநாடுகளில் சைவஆலய மரபுப்படி வார்க் கப்பட்ட பெரிய ஆலயமணிகள் காணப் பட்டமை (இந்தமணிகளைக் கடல் கொண்டு வந்ததாகவும் கூறுவர்)
நாகரீகத்தின் பிறப்பிடமாகக் கருதப்படும் கிரேக்கத்தில் லிங்கேஸ்வரர் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவதும், அலெக்ஸாந்திரி யாவில் அதி உயரமான சிவலிங்கம் கண்டு எடுக்கப்பட்டிருப்பதும், இந்தோனேஷியா, ஜா வா, சுமத்திரா, தாய்லாந்து, ஆப்கானிஸ்தான் உட்பட இன்னும் இவைபோன்ற ஊர்களில் இன்றும் காணப்படும் 9ம்,10ம்,11ம் நூற்றாண்டு களுக்கு முன்னர் கட்டப்பட்ட இந்துமதக் கோயில்களும் இடிபாடுகளும் இதர கலாச்சாரச் சான்றுகளும் உலகளாவிய நிலையில் இந்து சமயம் பரவி இருந்ததென்பதற்குரிய சான்று களில் சில.
இந்துக்களுடைய வாழ்க்கை நெறியைப் பிரதிபலிப்பதுதான் இந்துசமயம்
மற்றச்சமயங்களுக்கு இல்லாத ஒரு தனிச் சிறப்பை இங்கு குறிப்பிடவேண்டும். அதுதான் இந்துசமயம் தோன்றியகாலம் வரையறுத்துக் கூறப்படாமல் இருப்பது. மற்றச் சமயங்கள் எல் லாவற்றிற்கும் கிறிஸ்துவுக்குமுன்னர் என்றும் கிறிஸ்துவிற்குப் பின்னர் என்றும் காலம் வரையறை செய்யப்பட்டிருக்கும் போது இந்து சமயத்தின் பிறப்பைப்பற்றி எதிலும் கூறப் படவில்லை.
சமீபத்தில் வெளிவந்துள்ள ஒரு நூலில் இந்துசமயம் சிவனால் தோற்றுவிக்கப்பட்ட தென்றும், அன்றிலிருந்து ஆங்கில ஆண்டுக் கணக்கின்படி நாற்பத்து மூன்று லட்சத்து எழுபத்துமூன்றாயிரத்து நூறு ஆண்டுகள் ஆகிறதெனவும் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் அதற்கான ஆதாரம் அதில் தரப்படவில்லை. இது வரை குறிப்பிட்டவைகள் இந்திசமயத்தின் முற்காலம் பற்றியவையாகும்.
இனி ஒரு சந்தர்ப்பத்தில் இன்றைய சூழலில் இந்து சமயத்தின் நிலைபற்றி சிவத்தமிழில் சிந்திப்போம்.

# ஈரநெஞ்சம்

**கோகிலா.மகேந்திரன்**

தீபாவளி வருடப்பிறப்பு விளக்கீடு அவரது பிறந்தநாள் போன்ற விசேட தினங்களில் அவரைக் காணச்செல்பவர்கள் எல்லாம் ஒரு பிரசாதப்பொதியை பெற்றுக்கொள்ளாமல் திரும்புவது கடினம். வருடப்பிறப்பை ஒட்டி கோயில் நிர்வாகத்துடன் சம்மந்தப்பட்ட அனைவருக்கும், கைவிஷேமும் அன்பளிப் புகளும் இருக்கும். ஒரு சாதாரண நாளில்கூட அவரைக்காணச் செல்பவர்களுக்கு ஒரு தேநீ உபசாரம் இருக்கும். இவை எல்லாவற்றையும் விடத் தனிக்கவனம் பெறுவது அவரது உளமார்ந்த வார்த்தை உபசாரம்தான்.
எனது தனிப்பட்ட அநுபவம் ஒன்று.
ஒரு மழை நாளில் அம்மையாரைக் காணச் சென்றிருந்தேன். திரு.சிவபாலன் அவர்களுடன் கதைப்பதற்காகத் திருமுறைமண்டபத்தின் வெளி வராந்தாவில் அமர்ந்து கொண்டேன்.
அம்மாசொன்னார்.
"கோகிலா கால் வைக்கிற இடம் ஈரமாயிருக்கு ஒரு சாக்குகொணர்ந்து காலுக்கு கீழே போடுபிள்ளை"
உண்மையில் இந்த அன்புக்கு யாரும் அடிமை யாகாமல் இருப்பது கஷ்டமே!


நன்றி: தங்கத் தலைவி




## யோகர்தாசன்

**உம்முடைய ஒன்றும் இரண்டும்
இங்கே இண்டைக்கு உமக்கு ஒத்துவராது**


திருமூலர் பரம்பரையில் வந்த எங்கள் யோகர் சுவாமிகளும், அவருடையகுரு செல்லப்பா சுவாமிகளும், அவரின் குரு இந்தியாவில் இருந்துவந்து யாழ்ப்பாணம் பெரியகடையடியை தன் புனித தரிசனம் காட்டுமிடமாகக் கொண்டிருந்த கடையிற் சுவாமிகளும் தான் அறிந்தமட்டில் ஒரு மனிதரைக் கண்டவுடனேயே அவரின் உள்மனம், அந்தநபரின் ஆன்ம ஈடேற்றம், தற்கால நோக்கம், முற்பிறப்பு, அவரில் உள்ள உடல் உள குறை நிறைவுகள் என்னும் பல விடயங்களை முகம் பார்க்கும் கண்ணாடியைப் பார்த்துத் தெரிந்து கொள்வது போலத் தெரிந்து கொண்டு வித்தியாசம் வித்தியாசமான வழிமுறைகளைக் கையாண்டு அவரவர்களை ஈடேற்றினார்கள்.
போலித் தன்மையுள்ள மற்றவர்களை, ஏமாற்றித் தானும் ஏமாறாத தன்மையையும், எத்தொழிலைத் தான் செய்தாலும் பக்திசிரைத்தையுடன் மனதை ஒன்று குவித்து மனத்தை அலையவிடாமல் எல்லாம் சிவன் சேவை என்றெண்ணி அத்தொழிலில் முழு மனதுடன், ஈடுபடும் தன்மையையும் அவரவர்களுக்கென்று வகுக்கப்பட்ட கடமைகளை மறவாத்தன்மையையும் பெரிதும் விரும்பினார். இவற்றிற்கு உதாரணமாக யோகாச்சிரமத்தில் நடந்த ஒருசில சம்பவத்தை இங்கு கூறுகின்றேன்.
அன்று வழக்கம்போல் ஒருவெள்ளிக்கிழமை அந்தக் காலத்தில் யாழ்ப்பாணம் கதிரேசன் கோவிலுக்குப் பின்னால் கோணாந்தோட்டத்திற்கு அருகாமையில் இருந்த ஒரு மோட்டார் திருத்தும் தொழிலகத்தில் கணக்காளராய் வேலைசெய்த ஒருவர் என்னோடு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சுவாமி தரிசனத்திற்கு வருபவர் அன்றும் என்னோடு வந்தமர்ந்து தேவார திருவாசகப்பாராயணத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார். சுவாமிகள் திடீர் என்று அவரைப்பார்த்து இஞ்சேரும் காணும் உம்முடைய ஒன்றும் இரண்டும், இங்கே இண்டைக்கு உமக்கு ஒத்துவராது, போம் காணும் வீட்டை, என்று சொன்னார். இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த என்நண்பர் சடார் என்று எழுந்து போய் சுவாமியின் திருப்பாதங்களில் விழுந்து கதறி அழுது "என்பிழையை மன்னிக்க வேண்டும் என்தெய்வமே" என்று சொல்லிவிட்டு நான் வரும் வரை வெளியே காத்திருந்தார். நானும் வழக்கமாய் ஆச்சிரமத்தில் நடப்பவைஎல்லாம் முடிந்து சுவாமிகளிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்து நடந்தவற்றிற்கு நண்பரிடம் காரணம் கேட்டபோது தான் ஆச்சிரமத்திற்குக் காலையில் தன்வீட்டில் இருந்து புறப்படும்போது அங்கு வந்த கள்ளிறக்கும் தொழிலாளியைப்பார்த்து வீட்டில் உள்ள கொட்டகையில் ஒன்று அல்லது மேலதிகமாக இருந்தால் இரண்டு போத்தல் கள்ளுவைக்கும்படி கூறிவிட்டு வந்ததாகவும் பின் ஆச்சிரமத்திற்கு வந்து ஒரு வினாடி வீட்டில்கள் வைக்கப்பட்டிருக்குமோ? திரும்பிப்போய்க் கள்ளருந்த முடியுமோ என்று கவலைப்பட்டதாகவும் அது எப்படியோ முற்றும் அறிந்த மாமுனிவராம் குருநாதருக்குத் தெரிந்து விட்டதாகவும், இனிமேல் வாழ்க்கையில் மது அருந்துவதில்லை என்று தான் சங்கற்பம் செய்து கொண்டதாகவும் கூறினார்.



மலசலகூடம் துப்பர வாக்கும் தோட்டித் தொழில் செய்யும் கந்தன் என் பவரைக் கண்டால்,
"கந்தா நீ என்ன சிவ பூசையா செய்கிறாய்"!!!
நீ இல்லாவிட்டால் ஊரே நாறிப்போகும்,
என்று சுவாமிகள் சொல் லுவார்.

## அடியோடு சரி

இன்னும் ஒருநாள் ஆச்சிரமத்தில் எல்லோருக்கும் முன்னால் ஒரு இளைஞர் பத்மாசனத்தில் ஆடாமல் அசையாமல் தியானத்தில் இருப்பதுபோல் இருந்தார். வழக்கம்போல் எல்லாம் முடிந்ததும் எல்லோரையும் வீட்டுக்குப் போகும்படி சுவாமிகள் சொன்னபின்பும் அந்த இளைஞன் ஒன்றும் கேட்காதது போல் இருந்தார். இதைப்பார்த்த சுவாமிகள் கடும்கோபம் கொண்டவர்போல் கண்கள் சிவக்க நரசிம்ம அவதாரம் எடுத்து அந்த இளைஞரின் முதுகில் பளார் என்று அடித்து டேய் மால் செய்யாதையடா, ஆரை ஏமாத்துகிறாய்? ஓடடாவீட்டை என்று கத்தினார். அந்த இளைஞனும் பயந்து விழுந்தடித்துக்கொண்டு வீட்டிற்கு ஓடிச்சென்று விட்டான். இந்தச் சம்பவம் என் மனதுக்குள் பெரும்பிரளயத்தை உண்டு பண்ணி விட்டது. பத்துவருடங்களாக என்மனதை அச்சம்பவம் உறுத்திக்கொண்டே இருந்தது. பத்து வருடங்களின் பின் அந்த நபரைத் தற்செயலாகக் கண்டியில் சந்தித்தபோது அவர் சொன்னார் சுவாமிகளின் அடியினால் தன் மனத்திலும் உடலிலும் இளமையில் இருந்த நோய்கள் எல்லாம் மாறிவிட்டது என்று, அது தனக்குக் கிடைத்த தண்டனை அல்ல, ஆசீர்வாதம் என்று கண்ணீர் மல்கச் சொன்னார்.
அடிப்பதும் அணைப்பதும் அவன் கையல்லவா. ஆசான் திருவடிகளே சரணம் சிவசிவ



துர்க்காதேவி

**ஓவியம்:
செல்வி ஜயந்தினி
கங்காதரன்
யேர்மனி**

# நெற்றிக்கண்
## என்பதில் அர்த்தம் உள்ளது

**கனடாவில் இருந்து கனக்ஸ்**



பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னரேயே நெற்றிக்கண் பற்றிக் கூறப்பட்டுள்ளதை நாம் அறிவோம். அது வெறும் கற்பனையா? அல்லது அதற்கு விஞ்ஞான இரீதியான விளக்கம் ஏதாவது உள்ளதா?

நெற்றிக்கண். ஈழத்தின் பாடல்பெற்ற சிவத் தலம் பற்றிய தேவாரம், சுந்தரமூர்த்தி சுவா மிகள் பாடியது, ஏழாம் திருமுறையில் திருக் கேதீச்சரப் பதிகத்தில் வருகிறது.

மூவரென விருவரென முக்கண்ணுடைய மூர்த்தி
மாவின்கனி தூங“கும் பொழில் மாதொட்ட தன்னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.

இந்த மூன்றாவது கண் அல்லது நெற்றிக் கண் வெறும் கற்பனையா? விஞ்ஞானம் விடை தருகிறது. சான்று பகர்கிறது.

மூளையின் மேற் பரப்பினிலே நடுமூளைப் பகுதி யிலே கூம்புருச் சடலம் ( Pineal Body) அல்லது கூம்புருச் சுரப்பி ( Pineal Gland) எனும் சிறிய பகுதி ஒன்று உள்ளது.

இதன் கட்ட அமைப்பு அப்படியே ஒரு கண்ணினை ஒத்திருக்கும் எனினும் பார்ப்பதற்கு உபயோகிக்கப் படாமல் பதாங்கமாகக் ( Vesti geal Organ) காணப் படுகிறது. எனவே முன்னோர்களால் “மூன்றாவது கண்” எனப் பட்டது. இங்கே நான் முன்னோர்கள் என்று கூறியது ஒரு சில நூற்றாண்டுகட்கு முன் வாழ்ந்தவர்களையே. அவர்கள் இம் மூன்றாவது கண்ணினுக்கு தெய்வீகத் தன்மை உள்ளது எனக் கருதினர். அதனால்தான் டெஸ்கார்டேஸ் (Descartes) (1596-1650) எனும் பிரெஞ்சு தத்துவஞானி இக் கூம்புருவிலேயே மனித னுடைய ஆவி தங்கியுள்ளது என்றார்.

டெஸ்கார்டேஸ் நானூறு வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்தவர். அக்காலத்திலே தான் கூம்புருச்சுரப்பி பற்றிய எண்ணங்கள் மேலைத் தேயமக்களுககு உதயமாயின.

ஆனால் அதற்குப் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னர் சைவசமயிகள் இக் கூம்புருச் சடலம் பற்றி உணர்ந்து, அதன் தெய்வீகத் தன்மை பற்றித் தெரிந்து, அது இறைவனின் தன்மையாக இருக்க வேண்டும் என உணர்ந்து சிவனை நெற்றிக் கண்ணனாக உரு அமைத் தது விந்தையே.

கூம்புருச் சடலம் மனிதரிலே மண்டை ஓட்டினால் மூடப் பட்டுக் காணப் பட்ட போதிலும் கூர்ப்பின் கீழ்த் தளத்திலே உள்ள சில முள்ளந் தண்டுப் பிராணிகளிலே மண்டை ஓட்டிற்கு வெளியே காணப்படுகிறது. அவ் விலங்குகளிலே இது ஏனைய கண்களைப் போன்று ஒளி வாங்கி யாகவும் தொழிற் படுகிறது. மனிதரிலே கூட மண்டை ஓட்டின் மேற்புறத்தே ஒரு துவாரம் குழந்தை பிறக்கும் வரை இருந்து மூடப்படுவது தெரிந்ததே.

மூன்றாவது கண்ணினைப் பார்ப்போம். இது மெலரொனின் (Melatonin) எனும் ஓமொனைச் (Hormone) சுரக்கிறது. பொதுவாக இரவு நேரங்களிலேயே மெலரொனின் சுரக்கப் படுவதுடன் மூப்படைவதைத் தடுப்பதிலும் நிர்ப்பீடனத்துடனும் ( Immune System) பெரும் அளவிலே பங்கு கொள்கிறது. மெலரொனின் புற்று நோயினைக்கட்டுப் படுத்துவதிலும் சம்பந்தப் பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. இது தவிர ஆய்வாளர்கள் கூம்புருச் சடலத்தை ஒளி வாங்கியாகவும் (Photoreceptor) காந்த வாங்கி யாகவும் ( Magnetoreceptor) தொழிற்படு கின்றது என்பர். பகல் இரவு வட்டங்களை செயற்படுத்தும் பெரிய கடிகாரமாக (Master Clock) கூம்புரு செயற்படுகிறது.கூம்புருவின் உள்ளே காந்த சக்திவாய்ந்த பொருட்கள் இருப்பதாகவும் இவை செல்திசையினைத் (Navigation) தீர்மானிப்பதுடன் சம்பந்தப் பட்டவை எனவும் கருதுகிறார்கள். கண் குரு டானவர்களைப் பற்றிச் சிந்தித்தீர்களானால் இதன் உபயோகத்தின் முழு பரிமாணமும் புலனாகும்.

எனவே மூன்றாவது கண்ணின் மெலரொனின் மூப்படைவதைத் தடுத்து என்றும் இளமையுடன் இருக்க உதவுகிறது. இதனால் இறவாமை ஏற்பட வாய்ப்புண்டு அல்லவா? நோய் நொடி யற்று சுகதேகியாக இருக்கக் காரணமாகிறது. இதுவும் என்றும் சிரஞ்சீவியாக வாழ வழி வகுக்கிறது அல்லவா?

கூம்புரு ஒளிவாங்கியாகச் செயற்பட்டு இரவு பகல் வட்டத்தை நடாத்துகிறது. காந்த வாங்கி யாக செல்திசையினை வகுக்கிறது. கடவுள் என்றும் வாழ்பவர், சிரஞ்சீவியானவர் என்றும் இளமையானவர் என்பதால் நம்மவர்கள் இறைவனை நெற்றிக் கண்ணனாகக் கண் டனரோ. இப்படி நான் கூறுவதால் எமது முன்னோர்கள் விஞ்ஞான அறிவு உடைய வர்கள், பல ஆய்வுகளைச் செய்தவர்கள் எனப் பீற்றிக் கொள்ளவில்லை. அவர்கள் நிறையவே சிந்தித்துள்ளார்கள். அதை நினைக்கும் போது விந்தையாய் உள்ளது என மட்டும் கூறுகிறேன்.

# தோத்திரப் பிரியன்



சிவத்தமிழ்ச் செல்வி
**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

“ஆதியந்த மாயினாய்
ஆலவாயில் அண்ணலே
சோதியந்த மாயினாய்
சோதியுள்ளோர் சோதியாய்
கீதம் வந்த வாய்மையாற்
கிளர் தருக்கி னார்க்கவால்
ஓதிவந்த வாய்மையால்
உணர்ந்துரைக்க லாகுமோ”

இறைவழிபாட்டில் சிறந்த இருபகுதியாக அமைந்தவை தோத்திரமும் தியானமுமாகும். அவற்றுள் தோத்திரம் என்பது பிற இடங்களிற் சென்று அலைந்து அல்லலுறும் மனத்தை ஒருமுகப்படுத்தி இறைவன்பால் செலுத்த உதவுவதாகும். மக்களை அருளுலகில் ஈடுபடவைக்கும் சக்தி தோத்திரங்களுக்கு உண்டு. கண்ணீரை உகுக்கச்செய்து உள்ளத்தை உருக்கிப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்திவிடுவதும் தோத்திரங்களே. தியானம் என்பது இறைவன் வேறு, நாம் வேறு என்ற நிலையில்லாமல் அவனோடு ஒன்றித்து நிக்கவைக்கும் நிலையாகும். அந்த அனுபவத்தை அகத்திலே காணலாம். அதாவது அகவுலகில் சஞ்சரிக்க உதவியாக அமையும். ஆனால் முதற்கண் இன்றியமையாது வேண்டப்படுவது தோத்திரமே. ஏனெனில் புறத்திலே அமைதியை ஏற்படுத்தித்தான் அக அமைதிக்கு வழிகாணலாம். தோத்திரங்கள் பாட்டாக அமைந்து இசையோடு சேரும் பொழுது உருக்கத்தைத் தருகின்றன. உள்ளத்தை இன்புறுத்துவது இனிய ஓசையே ஆகும். இசை என்று கூறும் பொழுது இறைவனையும் எம்மையும் இசைவிக்கின்ற ஒரு சக்தியுண்டு என்பதை அச்சொல்லே காட்டு கின்றது. கேட்போர்களையும் பாடுவோர் களையும் பரமனிடத்து இசைவித்து நிற்பது பாட்டே ஆகும். இசைத்தமிழாற் பாடிப் பரவு கின்றவரே இறைவனை நன்கு உணரலாம் என்பது அருளாளர் கருத்து.

“அளப்பிலா கீதம் சொன்னார்க்கு
அடிகள்தாம் அருளுமாறே”

என்றார் அப்பர் சுவாமிகள்.
“பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக மண்ணின்றி விண் கொடுக்கும் மணிகண்டன் மருவுமிடம்”
என்பது ஞானசம்பந்தர் தேவாரமாகும்.
வேதங்களில் சாமவேதம் இசையோடு பாடப்படுவதால் அதுவே இறைவனுக்கு மிகவும் உவப்பானது என்று குறிப்பிடப்படுகின்றது.
வேதத்திலும் பல பகுதிகள் இருப்பினும் தோத்திரங்களாக அமைந்த பகுதிகளையே சிறப்பு வேதமாக ஓதுவார்கள். இறைவனே தன் திருவாயால் வேதங்களை ஓதிக்கொண்டும் தன் திருச்செவியால் இசையை அனுபவித்துக் கொண்டும் இருக்கிறான் என்பது புராண விளக்கம்.அவனுடைய வடிவமே தோத்திரமாக விளங்குகிறது என்பர். பண்டைக்காலத்திலும் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் தேவபாணி என்ற பெயரில் வழங்கப்பட்டமையும் யாவராலும் அறியப்பட்ட செய்தியாகும். இற்றைவரை தமிழில் எழுந்த பக்திப் பாசுரங்களும் திரு முறைகளும் எண்ணில் அடங்கா.
இறைவனே தோத்திரப்பிரியனாக இருந்து அடியார்கள் மூலம் இவற்றை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளார்.
சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்ட நேரத்தில் ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. திருவெண்ணைய் நல்லூரிலே கோயில் கொண்டு எழுந்தருளிய பெருமான் அசரீரி வாக்காகச் சுந்தரனாருக்கு மொழிந்ததனைச்சேக்கிழார் சுவாமிகள் பின் வருமாறு காட்டுகிறார்.

“மற்றுநீ வன்மை பேசி
வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கு மன்பில்
பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும்
ஆதலால் மண்மேல் நம்மை
சொற்றமிழ் பாடு என்றார்.
தூமறை பாடும் வாயார்”

அதாவது தாம் விரும்பும் பாட்டு அர்ச்சனைப் பாட்டே என்பதை உலகுக்குக் காட்டி யருளினார். அடியார்கள் பல தலங்களுக்கும் சென்று பாடிப்பாடி இறைவன் புகழைப் பரவச்செய்தமை பெரிய புராணத்தில் காட்டப் பட்டுள்ளது. இறைவனுக்கு மிக விருப்பமானது பாமாலையே என்பதைத் தாயுமான சுவாமி களும் “பன்மாலைத் திரள் இருக்க பாமாலை க்கே பட்சம் பரமனுக்கே” என்று பாடியுள்ளார். பண்சுமந்த பாட்டுகளுக்காக இறைவன் மண் சுமந்தான் என்பதும்,பிரம்படி பட்டோன் என்பதும் திருமறைச் சான்றுகளாகும்.

ஓரிடத்தில் சிவப்பிரகாச சுவாமிகள் மிக நகைச் சுவையாக இறைவன் புகழ்ச்சி விருப்பன் என்பதைக் காட்டுகின்றார்.
இதற்கு அவர் தரும் சான்று மேலும் சுவையானது. அதாவது மாணிக்கவாசகர் சிவ பெருமானைப் புகழ்ந்து பாடிய பாடல்களை எழுதிப் பாதுகாக்க வேண்டும் என்ற விருப்பம் சிவபெருமானுக்கு ஏற்பட்டது. இதனால், தானே ஏடும் எழுத்தாணியும் கொண்டு மாணிக்கவாச கரிடம் சென்று அவர் பாடிய பாடல்களை யெல்லாம் சொல்லும்படி கேட்டு, ஒன்றும் விடாமல் எப்படியோ எழுதினார். ஏன் என்றால் ஒரு நாட்டின் அமைச்சர் தன்னைப் புகழ்ந்து பாடிய பாடல் என்பதனாலேயே அவை பெருமைக்கு உரியனவாகையால் புகழ்ச்சி விருப்பனாகிய இறைவன் அதனை எழுதிக் கொண்டான் என்று காட்டுகின்றார் புலவர். என்றாலும் புகழ்ச்சி விருப்பன் என்று கூறுதலும் தகாது. ஏனெனில் அவன் விருப்பு வெறுப்பு அற்றவன் என்பதையும் காட்டுகின்றார். இப்பாடல் நால்வர் நான்மணி மாலையில் அமைந்துள்ளது.

“நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ,
மனம்நின் றுருக்கும் மதுர வாசக,
கலங்குறு சிவன்நெறி விளங்குறு வீர,
திங்கள் வார்சடைத் தெய்வ நாயகன்
ஒருகலை யேனும் உணரான், அ∴தான்று
கைகளோ முறிபடுங் கைகள், காணிற்
கண்களோ ஒன்று காலையிற் காணும்
மாலையில் ஒன்று வயங்கித் தோன்றும்
பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும்,
ஆயினும், தன்னை நீ புகழ்ந் துரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன், அதனால்
புகழ்ச்சி விருப்பன் போலும்,
இகழ்ச்சி அறியா என்பணிவானே,”

இத்தகைய நிகழ்ச்சிகளில் இருந்து இறைவன் “தோத்திரப் பிரியன்” என்பதும் பாடுவார் பழிதீர்ப் பான் என்பதும் நாமறிந்த உண்மையாகும்.

# நற்றமிழ் வளர்த்திடும் சிவத்தமிழ்ச் செல்வியே!

கண்ணிய வாழ்வுதன்னில் கடமையே கண்ணாக
காருண்ய சேவையாற்றும் கவின் மிகு கலாநிதியே!
எண்ணிய கருமமெலாம் எளிதினில் முற்றுறவே
ஏந்திளையாள் துர்க்கையம்மன் எழின்மிகு கருணையினால்
புண்ணியப் பேறாய் வந்துதித்த துர்க்கா துரந்தரியே!
புவிமீது நின்புகழ் புத்தொளி வீசிப் பறக்குதம்மா!
மண்ணிலே நாம்வாழ மாண்புறு நற்பணிகளாற்றும்
மங்கை நல்லாளே தங்கம்மாவே வாழ்க! வாழ்க!

சிந்தனையி லெந்நாளும் சிறப்பான எண்ணங்களுடன்
சீரோடும் பேரோடும் சைவம் வாழ வேண்டுமென
உந்தனையே அர்ப்பணித்த உத்தமியே! சிவத்தமிழ்ச்செல்வியே!
தனக்கென வாழாப் பிறர்க்குரியாளே! தங்கம்மாத்தாயே!
வந்தனையே செய்துநாம் வணங்கியே துதித்திடுவோம்
வாழ்க நீடுழி நீ வளமாய் நம் நாட்டினிலே
கந்தனையே கரங்குவித்தோம் காசினியில் மாண்புடனே
துர்க்கா துரந்தரியே தூயவளே வாழ்க! வாழ்க!

பெற்றதாய் போலவே மிகப்பிரியமுடன் பழகும்தாயே!
உற்ற நேரத்தில் உறுதுணையாய்க் கைகொடுத்தே
கற்ற கல்வியின் மேன்மை தன்னை எமக்கெடுத்துரைத்தே
பற்றுநீங்கி வாழ்வைத் தமிழ்ப்பணிக்கே அர்ப்பணித்த
முற்றறிவு மிக்க மூத்ததமிழ்த்தாயே தங்கம்மா அப்பாக்குட்டியே!
முழுநிலவாய் ஒளிவீசும் தெல்லியூர்ப்பதி பெற்றெடுத்த
நற்றமிழ் வளர்த்திடும் சிவத்தமிழ்ச் செல்வியே! அன்னையே!
நானிலம் போற்ற நீடுவாழ்க! வாழ்க பல்லாண்டே!!

**‘சைவப்புலவர்’ ‘சிவநெறித் தொண்டர்’**
**யாழ். ஸ்ரீதர் வில்லிசை கலைஞர்**
**திரு. இராசையா ஸ்ரீதரன்**
291 நாவலர் விதி
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்

*நான்கு நாடுகளில்*

## சிவத்தமிழ் விழா

**சிவத்தமிழ்ச்செல்வியின்**
**முத்துவிழாச்**
**சிறப்பிதழாக மலர்கிறது**

**சிவத்தமிழ்**

(ஆசிரியர்: கலாநிதி
வெற்றிமணி (மு.க.சு.சிவகுமாரன்)

**நூல்வெளியீடு**
**காலம் தந்த கைவிளக்கு**

(ஆசிரியர்: கலாநிதி
மனோன்மணி சண்முகதாஸ்)

**தாயகம்:**
**துர்காதேவி**
**கல்யாணமண்டபம் தெல்லிப்பழை**
**10.01.05**

**லண்டன் : (ஈலிங்)**
**ஸ்ரீ கனகதுர்கை அம்மன் ஆலயம்**
**29.01.05**

**யேர்மனி- 05.02.05**
St.Monika Gemeindezentrum
Am Kleinenberg
58239 Schwerte-Ergste
Germany

**கனடா :**
**ரெரன்ரோ-நல்லூர் கந்தசுவாமி ஆலயம்**
**18.02.05**

# சொர்க்க வாசல்!



ஒரு படைத்தளபதி குருவை வணங்கிவிட்டு ,சொர்க்கமும், நரகமும் உண்டா? என்று கேட்டான்.
."நீ யார் என்று கேட்டார் குரு.
"நான் ஒரு தளபதி என்று பெருமிதத்துடன் பதிலளித்தான்.
அப்படியா? சாப்பாட்டிற்கு என்ன செய்கிறாய்? என்று கேட்டார் குரு.
சரியான கோபம் வந்து விட்டதுதளபதிக்கு.
தளபதி என்று சொல்லிவிட்டேன் பிறகும் இப்படிக் கேட்கிறாரே என்று கொதித்தான் அவன்.
"நான் ஒரு தளபதி"என்றான் அவன். கோபத்தை அடக்கிக்கொண்டு.
ஹா ஹா ஹா என்று உரக்கச் சிரித்தார் குரு.
தளபதி திகைத்தான்!
எந்த மடையன் உன்னை இங்கே தளபதியாக வைத்துக் கொண்டிருக்கிறான்?
நீ எனக்கு கசாப்புக் கடைக்காரன் போல் தோன்றுகிறாய் என்றார் குரு.
தளபதிக்கு கோபம் கொந்தளித்தது.
சட்டென தன் உடைவாளை உருவினான்.
உங்களை ஒரே வெட்டாக வெட்டிவிடப் போகிறேன் என்று வாளை ஓங்கினான்.
"இதோ இது தான் நரகவாசல்" என்றார் அமைதியாக.அஞ்சாமல்.
அவன் புத்திசாலி புரிந்து கொண்டான்.
சட்டெனச் சினம் தணிந்தான்.
தலைபணிந்து குருவை வணங்கினான்.
என்னை மன்னிக்கவேண்டும்.
தவறுசெய்துவிட்டேன்.என்று பணிவுடன் கூறி.
உடைவாளை உறையினில் போட்டான்
"இதுதான் சொர்க்க வாசல்" என்றார் குரு..
சுவர்க்கமும் நகரமும் ஆகாயத்தில் அந்த ரத்தில் இல்லை.
அது ஒவ்வொரு மனிதனிடமும் உள்ளது.
மனிதனே தன் செயலால் அவற்றை உருவாக் கிக் கொள்கிறான்.
எந்த வினாடியும் உன்னால் சுவர்க்கத்தை உருவாக்கிவிட முடியும். எல்லாம் உன்கையில் இருக்கிறது.

**வாளுறையில் வாளடக்கம்**
**வாயுறையில் வாயடக்கம்**

-சிவாக்கியார்

# சொல்லும் பணியும் பல்லாண்டு காணவேண்டும்

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**



சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி மங்கையர்க்குத் தனி அரசி, எங்கள் தெய்வம்.
அவர் ஈழத்தமிழ் மக்களின் இணையில் லாச் சொத்து.
இவரைப் போலொருவர் இன்னும் வரவில்லை.

உள்ளம், சொல், செயல் மூன்றுமே அருள்மிகு துர்க்கையம்பாளுடனானவையாகக் கொண்டு ள்ளவர் எங்கள் அம்மா தங்கம்மா அப்பாக்குட்டி. நான் இளம் விரிவுரையாளராகப் பேராதனைப் பல்கலைக் கழகத்திலே பணியாற்றும் காலத்தில் கலாநிதி சு. வித்தியானந்தனுடைய வீட்டிலே அம்மாவை முதன்முதல் கண்டேன். கண்டியிலே சொற்பொழிவுகள் ஆற்றுதற்காக வந்திருந்தார்.
அவருடைய செஞ்சொற் சிறப்பினைப் பற்றிப் பின்னர் அறிந்தேன். கல்விப் பணியும் தெய்வப் பணியும் சமூகப் பணியும் ஆற்றி வந்த அவரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிச் சிறப்புச்செய்யத் தீர்மானித்தபோது, அவரைப் பல்கலைக் கழக வேந்தருக்கு அறிமுகஞ்செய்து உரையாற்றும் வாய்ப்பினை எனக்குத் தந்தார்கள். மிகவும் அரிய, இனிய, மகிழ்ச்சியான வாய்ப்பு அது. பட்டமளிப்பு விழாவன்று அம்மாவை அறிமுகஞ் செய்து ஆற்றிய உரை வரிக்கு வரி இன்றும் நினைவிலுள்ளது.



எங்கள் இளைய சமூ கத்துக்கு அம்மா வின் வைரமான இனிய செந் தமிழ்ச் சொற்கள் இன்னும் வேண்டும். எண்பது வயதிலும் இத்தகைய வைரமான இனிய செந்தமிழ்ச் சொல் பேசும் சிவத் தமிழ்ச் செல்வியின் சொல்லும் பணியும் இன்னும் பல்லாண்டு காணவேண்டும்.
இதற்கு அந்த அருள்மிகு துர்க்கையம்பாள் அருள்பாலிக்கவேண்டும்.

# துர்க்கை அம்மன் ஆலயமும் துர்க்கா துரந்தரியும்

**நகுலா சிவநாதன்**

ஆசிரியர் - செல்ம் - யேர்மனி

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அம்மாளின் அருளை இனிதே முற்றாகப் பெற்றவர். சமாதான நீதவானாய் சரித்திரம் போற்றும் சைவ நாயகியாக திகழ்பவர் இவர். சமூக சேவகியாக ஆலயம் தவிர்ந்த ஆன்மீக தொண்டும், போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளையும், மக்களையும் அரவணைத்து அவர்களை பார்க்கும் அருந்தொண்டையும் ஆற்றுபவர் துர்க்கா துரந்ததியே ஆவார்.
ஆலயத்து மணியோசை ஓங்கி ஒலிக்கின்றது. வானுற ஓங்கிய எழிற்கோபுரம் வாவா என்று ஒளிர்கிறது. வேண்டுவோர் வேண்டுவதை கொடுக்கும் ஆலயமாகவும் இது விளங்குகிறது.
அம்பாளின் கருணையுடன் எத்தனையோ கன்னிகளுக்கு திருமணமும் நிறைவேறியது இந்த ஆலயத்திலே ஆகும். 15 வருடத்தின் பின் தாயக மண்ணில் பாதம் பதிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.
சென்று பார்த்து பெருமைப்பட்டேன் இந்த ஆலய வளர்ச்சி கண்டு. இன்று இந்த ஆலயத்தின் உதவியால் 7 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர் என்ற மகிழ்வான செய்தியையும் அம்மையார் கூறியது பெருமையாக இருக்கிறது. அன்புடனும் பண்புடனும் தெய்வ சிந்தனையுடன் அம்மையார் கூறிய வார்த்தைகள் ஆள்மனதில் இப்பவும் அழியாமல் உள்ளது. தாங்கொணாத தாயகப் போரிலும் தாக்குப்பிடித்து நிமிர்ந்து நின்ற ஆலயம் இது. இன்று 80 வயதை எட்டிப்பிடித்து முத்துவிழா காணும் துர்க்கா துரந்ததி குன்றாத அழகுடனும் மங்காத தமிழுடனும் வாழ்பவர். மக்களை அன்போடு அணைத்து நோய் தீர்க்கும் நல்ல ஆசானாக விளங்குபவர்.
சிவத்தமிழ் எடுக்கும் சிறப்பான விழாவில் எல்லா கலையும் ஒருங்கே பெற்ற தூக்கா துரந்ததி செல்வி அப்பாக்குட்டி தங்கம்மாவை வாழ்த்துவோம். சிவத்தமிழும் துர்க்கா துரந்ததியும் இரண்டறக் கலந்து தாயகத்தில் ஒலிக்கட்டும்.
வாழ்க துரந்ததியே!
வளர்க உன் சேவை வானுயர!
புலத்தில் புதுமைகள் செய்யும் வெற்றிமணி தாய் நிலத்தில் தரமான ஒரு அம்மையாருக்கு சிவத் தமிழால் பெருமைப்படுத்த எடுக்கும் இச்சிறப்பிதழ் சிறக்கும். கலாநிதி சிவகுமாரனின் இந்த நற்பணியை உலகம் வரவேற்கும்.
சிவத்தமிழ் சீரும் சிறப்புடனும் சிவத்தமிழ் செல்வியை தாங்கும் சிறப்பிதழாக தாயகத்தில் ஒலிக்க வாழ்த்துகிறோம்.

# தக்க நேரத்தில் உதவிய தங்கமகள்



**விவேகானந்தா சபை**

**அநுராதபுரம்**

519/C Jeyanthi Mawatha
Anuradhapur

**சிவஸ்ரீ ப.ஞானச்சந்திர குருக்கள்** J.P

அநுராதபுரத்தில் சுவாமி விவேகானந்தரின் வருகையால் சைவத்தையும் தமிழையும் வளர்க்க 1925ம் ஆண்டு உருவாகியதுதான்: மேற்படி விவேகானந்த சபை. அநுராதபுரத்திலே ஆன்மீக வளர்ச்சிக்காக தமிழ் மக்களுக்காக சேவையாற்றிய ஒரேயொரு ஸ்தாபனமும் இதுவே என்று அறியப்படுகின்றது.
1985 இல் அநுராதபுரத்தில் நடைபெற்ற மிக மோசமான வன்செயல்களால் 99.9 வீதமான தமிழ்மக்கள் இடம்பெயர்ந்ததுடன் மேற்படி விவே கானந்த சபைக் கட்டடமும் இந்தக் கோவில்களும் முற்றாகச் சேதமாக்கப்பட்டிருந்தது. மீண்டும் தமிழ்மக்கள் குடியேறாமையினால் இந்துசமய, தமிழ்க்கலாச்சாரங்கள் அழிந்து கொண்டிருந்தது. ஆலயங்களில் பூசைகள் இன்றியும் இந்துசமயம் போதிக்க ஆசிரியர்கள் அற்ற நிலையிலும் எஞ்சியிருந்த ஏழைத்தமிழ் மக்களும் இந்துக்களும் வழிகாட்டவும், உதவும் ஒருவரும் இன்றி வேற்று மதங்களுக்கு மாறியும் சிங்கள மொழியில் கல்விபயிலவும் தொடங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.
2000 ம் ஆண்டு கதிரேசன் ஆலய பரிபாலன சபையினரின் முயற்சியால் விவேகானந்தசபை புனரமைக்கப்பட்டு இயங்க ஆரம்பித்தது. சபைமீண்டும் ஆலயங்களை புணரமைக்கவும், ஆலயங்களில் நித்திய நைமித்திய பூசைகளை நடாத்தவும், பாலர் பாடசாலை, அறநெறிப்பாடசாலை போன்றவற்றை நடாத்தவும், பாடசாலைகளில் இந்துசமயம் சங்கீதம் நடனம் போதிக்க ஆசிரியர்களை நியமிக்கவும் தமிழ் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவவும் பலதிட்டங்களை வகுத்து எஞ்சியிருக்கும் தமிழர்களை தமிழர்களாகவும், இந்துக்களை இந்துக்களாக்கவும் வாழ செயல்படுத்த ஆரம்பித்தது.
இதற்கான உதவிகளைப் பெறும் நோக்குடன் உதவிகோரி விண்ணப்பித்தோம். எமது பணிக்காக இதுவரை குறிப்பிடத்தக்க உதவிகள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை எனினும் மனம் தளராது இயன்றவிதத்தில் கிடைக்கும் உதவிகளைக் கொண்டு திட்டங்களைச் செயல்படுத்துகிறோம்.
இந்நிலையில் ஏ 9 பாதைதிறக்கப்படாத நிலையில் அநுராதபுரத்தில் தற்போது தமிழ்மக்கள் செறிந்து வாழும் நிராவியடியில் உள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய புனரமைப்புப் பணிக்காக அன்னையிடமும் பரிபாலன சபையினர் நிதி உதவி கேட்டு எழுதியிருந்தனர். யுத்தத்தினால் பாதிப்படைந்து கொண்டிருக்கும் யாழ்பிரதேசத்தில் பாரிய தொண்டுகளை ஆற்றிக்கொண்டிருக்கும் அன்னை உடனேயே இத்திருப்பணிக்கும் நிதி அனுப்பி தமது சேவையினை அனுராதபுர வாழ் இந்துத் தமிழ்மக்களுக்கும் கிடைக்கச்செய்தார். பின்னர் யாழ்நகரில் இவ்வாலயத்திற்கு நிதிசேகரிக்கச் சென்ற எமது பரிபாலன சபையினர் அன்னையைச் சந்தித்தபோது இன்முகத்துடன் வரவேற்று மீண்டும் நிதி உதவி செய்ததை என்றும் மறக்க முடியாது அன்னையின் தொண்டு பல்லாண்டுகாலம் தொடர இறைவன் அருள்புரிய அனுரதபுரம்வாழ் இந்து மக்கள் பிரார்த்திக்கின்றனர்.

# சிவத் தமிழ்ச் செல்வி வாழி!

**கவிஞர் கந்தையா இராஜமனோகரன்**

சைவமுந் தமிழுங் கண்கள்
சாதனை படைத்த பெண்கள்
கைதரும் விரல்கள் எண்ணிற்
காட்சியில் மூவர் மண்ணில்!

காரைக்கால் அம்மை அன்று
காசினியில் ஔவை நன்று
யாரைக்காண் பீரோ இன்று
யாழ்நிலம் தந்த தென்று?

சிவத்தமிழ்ச் செல்வி இன்று
சிவனுக்கும் இவளோர் கன்று
தவத்திரு பெற்று நின்று
தமிழ்த் தொண்டுசெய்வாள் நன்று!

வாழத்தான் வழியே இல்லை
வறுமையே வாழ்வின் எல்லை
சூழத்தான் ஒழியாத் தொல்லை
சுகம்வரத் தெரியா எல்லை.

என்றுள்ள மகளிர் எல்லாம்
இணைத்துமே அமைத்தார் இல்லம்
இன்றுள்ள நிலையை உணர்ந்து
இணைத்தனர் முதியோர் எல்லாம்.

அகவையோ எண்ப தாகும்
ஆனாலுளம் முப்ப தாகும்
இகமதில் உதவி யார்க்கும்
ஈயுந் தங்க அம்மா ஆகும்.

நிலமதில் நீடு வாழி!
நீண்டிடும் கருணை வாழி!
புலம்பெயர் தமிழன் நாவின்
புகழ்ச்சியின் உண்மை வாழி!


**தாய்மண்ணின் வாசமழை உங்கள்**




தொலைபேசி: 0208 3771402
தொலைநகல் 0208 3771403
தொழில்நுட்பத் தொடர்புகளுக்கு
முருகரட்ணம்:
0208 8106786 - 0163-3949817
பரனிருபசிங்கம் 0171 7561231

**t.t.n**
Post.Box101128
46011 Oberhusen
Germany


# வாழ்வே கவிதை

**நிலாமகள்**



## அன்னையின் நோக்கும் ஆச்சியின் வாக்கும்!

உன் திருமுகத்தைப் பார்க்கின்றேன்
பின்னே மஞ்சள் ஒளிவட்டம்
தெரியவில்லை
கனிவான கரங்களை கண்டேன்
திரிசூலமோ அங்கில்லை
முன்னே இரு பாதங்களும் தெரிந்தன
தங்கத் தாம்பாளத்தில் பாதம் பதியவில்லை
இருந்தும்...
முற்று முழுதாய் நோக்கினேன்
துர்க்கா துரந்தரியே - நீ
தூரத்தில் இல்லை



## இறைவன் உறைவான்


ஆலயங்கள்
குருகுலமானால்
மக்களே பெரும் ஆலயமாவார்

இறைவனுக்குள் மனிதன் நிறைந்தால்
மனிதனுக்குள்ளும்
இறைவன் உறைவான்

# சிவத்தமிழ்ச் செல்வி

**செல்லத்துரை சத்தியமூர்த்தி** (கனடா)

பாரோங்கு சீருடை சிவத்தமிழ்ச்செல்வி
காரோங்கு மேனி துர்க்காதேவிதன் -ஏரோங்கு
பொற்பதங்கள் போற்றிப் புகழுடனே வாழ்கவெனச்
சிற்பரனை வேண்டுதுமே யாம்



இந்தப் பரந்த உலகிலே அனுட்டிக்கப்படுகின்ற சமயங்கள் பல. அந்தந்தச்சமயநெறி தவறாது விளங்குகின்ற போதிலும், "சைவசமயம்" தனக்கென ஒருவழி அமைத்து உயர்வுடன் விளங்குகின்றது என்பதை எவரும் மறக்கமுடியாது. "மேன்மைகொள் சைவநீதி" உலகமெங்கும் பரந்துள்ளது.

இதனை அருளாளர்கள், அறிஞர்கள், சிந்தனையாளர்கள், அவரவர் பெற்ற அனுபவங்கள் மூலம் அறிந்து சாதனைப் படுத்தியுள்ளமையை நாம் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. இத்தகைய சிறந்த சைவசமயம் மனிதவாழ்வில் எத்தகைய மேன்மையை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஆதிகாலம் தொடக்கம், ஆண்கள் பெண்களாகிய இருபாலாரின் பங்களிப்பின் மூலம் காணக்கூடியதாக இருக்கின்றது. சைவசமயக் கோட்பாடுகளை, சமயம் விதித்திருக்கின்ற ஆசாரங்கள் ஆகியவற்றை முறையாக மக்கள் அனுட்டித்து வந்தபோது நாடு, வீடு ஆகியவை அமைதியாகவும் ஆனந்தமாகவும் காணப்பட்டு எங்கும் அன்பு ஆனந்தம், அமைதி, அருள், கருணை ஆகியவை அனைத்தும் ஒருசேர நின்று இறையருளைமக்கள் முழுமையாக அனுபவிக்கும் நிலை ஏற்பட்டது.

இதனை நாயன்மார்களின் புகழ்பாடும் பெரிய புராணம், ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் எமது சைவசமயத்திற்கு ஆற்றிய அளப்பரும் தொண்டினைப் பறைசாற்றியுள்ளது இன்று தாய்மையின் சீரிய சமயப்பணி வெகுவாகக் குறைந்து விட்டாலும் ஒளிச்சுடர் ஒன்று தாயகத்திலே பிரகாசித்துக் கொண்டுதான் இருக்கின்றது. மக்கள் சமுதாயம் சீர்பெற்று அமைதியுடனும், ஆனந்தத்துடனும், சமயநெறி நின்று மனிதாபிமான உணர்வோடு செயலாற்ற தாய்மை வீறுகொண்டெழ வேண்டும்.

காரைக்கால் அம்மையார், திலகவதியார், மங்கையற்கரசியார் ஆகியோர் சமய வளர்ச்சிக்கும், சமுதாயவளர்ச்சிக்கும் ஆற்றிய அரும் பெரும் பணி இன்றும் எண்ணிப்பார்க்கும்போது எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது "தான் உண்டது மண்ணுண்டது, பிறர் உண்டது சிவன் உண்டது" என இல்லறம் நடத்தும் பெண்களுக்கு தெய்வீக வாழ்வில் சிறப்பை எடுத்துக் காட்டிய புனிதவதியார் "தவம்என்று பாயிடுக்கித் தலைபதித்து நின்றுண்ணும், அவமொன்று நெறி வீழ்வான் வீழாமே அருளும்" என சிவநெறிநின்ற திலகவதியார் சைவசமய நீதி தழைக்க அருள்த்தொண்டாற்றிய பாண்டிமாதேவி தவ நெறியின் சிறப்பினை உரைத்த மங்கையற்கரசியார் ஆகியோர் இல்லாத இன்றைய நிலையில்

தொண்டுளம் பக்தி சீலம் ஆசாரம்
தூயதோர் சிந்தை நற்பண்பு
கொண்டுல குய்ய ஓய்விலா தோடி
கோயில்கள் மன்றங்கள் தோறும்
உரையாற்றும் நற்பணியும்
வேரென விளங்கும் அறத்தினை விளக்கி
விண்ணவர் அமுதினைப் படைத்தெம்
ஊரினைப் புனிதம் ஆக்கும்

சீரிய தொண்டினைச் செய்வதற்கும் அன்னை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருளால் தோன்றிய ஓர் "ஒளிச் சுடர்" தான் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆவார்.

தாய்மை என்ற சொல் பல்வேறு செயற்பாடுகளின் உறைவிடமாகும். நிலமடந்தையானவள் உணவை விருத்திசெய்வதுபோல பெண் என்பவள் சமூகத்தை விருத்திசெய்கின்றாள் என்றபடி அன்னையும் சமூக, சமய வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்து செயல்பட்டுவருகின்றார் அவரது ஒவ்வொரு செயல்பாடும் சமய வளர்ச்சிக்கும் சமுதாய எழுச்சிக்கும் அடிகோலுவதாகவே அமைகின்றது என்பதை "அகவை எண்பதை" நிறைவு செய்யும் இந்த நேரத்திலும் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் பெருமானின் திருவாக்குக்கு அமைய அம்மையின் தொண்டும் நிலை பெற்று வருகின்றது.

சமயநெறி தழைக்க பெண்கள் வாழ்வு மலர
அறிவுச்சுடர்பெருக ஆன்மீக நெறி ஓங்க
அன்னையே வாழ்க பல்லாண்டு!

# தெய்வீகத்தாய்

**திருமதி. குணா வேலுப்பிள்ளை**
(லண்டன் கிங்ஸ்பெரி தலைமை ஆசிரியர்)

வாழ்நாள் முழுவதும் தன்னலமற்ற தொண்டு செய்யுந் தியாகச் செம்மல்களை முடிசூட்டிப் பாராட்ட வேண்டியது எமது தலையாய கடமையாகும். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற கூற்றிற்குச் சான்றாக வாழ்ந்து வாழும்போதே "தெய்வீகத்தாய்" என்னும் உயர்ந்த ஸ்தானத்தை எட்டிப்பிடித்துவிட்ட அம்மையார் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை நாம் மட்டுமல்ல அவரது அன்பினால் பிணைக்கப்பட்ட அத்தனைபேரும் கரங்கூப்பி வாழ்த்தி வணங்குகின்றனர்.

இவர் "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்" என்ற இலட்சியத்துடன் வரலாறு படைத்துக் கொண்டிருக்கிறார். "துர்க்கா துரந்தரி" எனப் போற்றப்பட்ட அம்மையார் தனக்கென வாழாது பிறருக்காகவே வாழ்கின்றார். இன்னும் நொந்துபோன மக்களுக்காக பெண்களுக்காக, பிள்ளைகளுக்காக, குழந்தைகளுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று கூறினால் மிகையாகாது.

அப்பாக்குட்டி தம்பதிகள் செய்த முற்பிறப்பின் பயனாக 1925ம் ஆண்டு தை மாதம் 7ம் திகதி அவதரித்த அம்மையார் -தங்கம்மா- எனப் பெற்றோரால் நாமம் சூட்டப்பட்டார். பெயருக்கேற்ப இவர் இன்றும் என்றும் விலைமதிப்பற்ற புடம் போட்ட தங்கமாகத் துலங்கிக் கொண்டிருப்பார் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. சிறுவயதில் இருந்தே இவர் உண்மை, நேர்மை, அமைதி, சமயப்பற்று, சமூகப்பற்று போன்ற முதலியபல இலட்சணங்களைப் பெற்றிருந்தார். தான் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம் என்ற நோக்குள்ள புனிதப் பணியான ஆசிரியைப் பதவியை மேற்கொண்டு யாழ் - இராமநாதன் கல்லூரியிலே கடமையைக் கண்ணியமாகச் செய்தார். விரைவில் தமிழ் பண்டிதைப் பதவியையும் தேடிக்கொண்டு தொடர்ந்து மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களிலும் சேவை செய்தபின் தன் பிறப்பிடமாகிய தெல்லிப்பழையில் யூனியன் கல்லூரியில் ஆசிரியராக இணைந்து கொண்டார். அன்றில் இருந்து அறநெறிப்பணியில் தன்னை அர்ப்பணிக்கத் தொடங்கினார். பெரியோர் சிறியோர்களில் இறையுணர்வை அதிகரிக்கச் செய்ய வல்ல நெஞ்சை உருக்கக் கூடிய முறையில் ஆத்ம சிந்தனையைத் தூண்டக்கூடிய வண்ணம் சொல்வளம், பொருள்வளம், அருள்வளம் மிக்க இவரது பிரசங்கங்களும் போதனைகளும் பலரது உள்ளங்களைக் கொள்ளை கொண்டுள்ளன. இவரது அயராத உழைப்பினால் உருவாக்கப்பட்ட மகளிர் இல்லம், அன்னை இல்லம் அவர்களுக்கான பயிற்சி நெறிகள் அம்மையாரின் அரும்பெரும் சேவையை நிலைநிறுத்தி நிற்கின்றன.

வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடத்தையும் சமயத் திற்காகவும் சமூகத்திற்கும் அர்ப்பணித்த இவர் "சைவக்கிரியைகளும் விரதங்களும்" என்ற நூலையும் வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் மட்டுமல்லாது. சிங்கப்பூர் மலேசியா, இந்தியா போன்ற பல நாடுகளிலும் இவரது நாவன்மைமிக்க சொற்பொழிவுகளும், பிரசங்கங்களும் இவரது புகழைக் கொடிகட்டிப் பறக்கச் செய்தன.

இவரது அளப்பரிய அரும் பெருஞ் சேவையைப் பாராட்டி, "செஞ்சொற்செம்மணி", "திருமுறைச் செல்வி", "துர்க்கா துரந்தரி" ,"சிவஞான வித்தகர்", "கலாசூரி" போன்ற பல பட்டங்கள் சூட்டப்பட்ட போதிலும் "சிவத்தமிழ்ச்செல்வி" என்ற நாமமே பெரிதும் புழக்கத்திலுள்ளது.

தொடர்ந்து ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் பொருளாளராகப் பதவியேற்ற அன்று தொடக்கம் தனது சேவைகளை மென்மேலும் விஸ்தரித்துக் கொண்டார். தனது ஓய்வு நேரத்தில் மெற்கொண்ட ஆய்வுகளின் பேறாகக் கிடைத்த "கந்தபுராணப்பொருள்" என்ற நூல் சாகித்திய இலக்கியவிருதை தட்டிக்கொண்டது.

ஈழத்தில் போர் அனர்த்தங்கள் ஏற்பட்ட போதிலுங்கூடச் சிறிதேனும் தளராது மக்களின் துயர்துடைக்க விடாமுயற்சியுடன் பாடுபட்டார். தனது இல்லங்களை இடத்திற்கிடம் மாற்றி துன்பமுற்றவர்களைத் தேடிச்சேர்த்து ஆதரவு வழங்கிப் பராமரித்தார். தியாக சிந்தனை, தராள மனப்பான்மை, தூய உள்ளம், நேர்மை உணர்வு, அறநெறிப்பண்பு போன்ற பண்புகளின் உந்து சக்தியே இவரது வெற்றிக்குப் பின்னணியாக அமைந்துள்ளன. அவரது சுவடுகளில் அடியெடுத்து வைக்கப் பலர் முன் வரவேண்டும்.

உலகமக்கள் யாவரும் திரேசா அம்மையாரை - தியாகத்தின் தேவதை என்று பாராட்டும்போது ஈழத்தமிழர்களாகிய நாமும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை - அன்பின் அன்னையாகக் காண்போம்.

அவர் நீடுழி வாழ்ந்து மென்மேலும் அறப்பணிகளைத்தொடர அவரது தங்கக் கரங்களைப் பலப்படுத்துவோமாக.



**சேவை**

**பக்தி**
**இவர் இதயமாகும்**
**தமிழ்**
**இவர் சுவாசமாகும்**
**சேவை**
**இவர் உயிராகும்**

**கவிநயன்**

# தங்கக் கவிதை

**சகிதேவி கந்தையா**
Quail Manor
26911 Thiumph Ave
Canyon Country, CA 91387 USA

சிவத்தமிழ்ச் செல்வியின் சிறப்பிதழுக்கு (சிவத்தமிழ்) உலகெலாம் பரந்த அன்பர்பலர் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பரந்த சேவைகளைப் பாராட்டி பாட்டாகவோ பனுவலாகவோ வெவ்வேறு கோணத்தில் நோக்கலாம், பேச்சாற்றலை விதந்துரைக் கலாம், குறுநகை அழகைப் படம் பிடித்துக் காட்டலாம். ஆனால் சிவத்தமிழ்ச்செல்வி அவர்கள் தன்னை ஆளாக்கியவர்களை நினைவு கூர்ந்த தன்நூலில் என் தாய் தந்தையரைப் பற்றிய பல உயர்ந்த கருத்துக் களைக் கூறியிருந்தார்
சிறப்பாக எம் குடும்பத்துடன் தன் நீண்டகால நெருங்கிய தொடர்பை மிக அன்பாக எடுத்துரைத்துத் தன் உணர்வுகளில் இன்னும் எம்குடும்பம் நெருக்கமாக இருப்பதை விளக்கியிருந்தார். 55 ஆண்டுகட்கு மேற்பட்ட இந்த நெருங்கிய தொடர்பால் இவர் மேம்பட்ட வாழ்க்கையின் வளர்ச்சியை அருகிருந்து பார்த்ததால் பரந்தகண்ணோட்டத்தில் எழுந்த என் கணிப்பை என்வார்த்தைகளாய் கூறாது ஒரு உலகமகாகவியின் அமரத்துவ மகாவாக் கியங்களை பொறுக்கிப் பொருத்தமாகத் தருவதன் மூலம் அதன் செழுமையை முழுமையாகக் காட்ட என் பங்குப் பணியாக நான் மேற்கொள்கிறேன்.
இலக்கியத்துக்காய் நோபல்பரிசைப்பெற்ற மாபெரும் கவிஞன் சாந்திநிகேதனெனும் இயற்கையுடன் இணைந்த உலகக் கலைக் கூடத்தின் தந்தை, இன்னும் பாரததேசத்தின் பிதாமகனாய் போற்றப்படும் ரவீந்திரநாத்தாகூர் எனும் மகான் புகழ் பெற்ற கீதாஞ்சலியைவிட நெருப்பு மின்மினிகள் (Fire Flies) எனும் கட்டுக்கோப்பான குறுகிய குறளாய் அமைந்த பாடல்கள் அடங்கிய நூலையும் இயற்றினார். - என் கற்பனைகள் நெருப்பு மின்மினிகளாய், உயிருள்ள ஒளித்துண்டுகளாய் இருளில் கண்சிமிட்டுபவை- என அவரே அதை விதைந்துரைக்கிறார்.
தங்கம்மா அப்பாக்குட்டியின் விரிந்து பரந்த தொண்டிற்கு மிகப்பொருத்தமான சில பாக் களை அப்படியே ஆங்கிலமொழி பெயர்ப்பில் (அவர் இயற்றிய வங்காள மொழியில்) எழுதி அதன் தமிழாக்கத்தையும் தருகிறேன்.
தம்மைத்தாமே முழுமையை நோக்கி இட்டுச் செல்பவர்கள் எல்லோரும்“நெருப்பு மின்மினி களே”.

'Let me light the lamp says the star, 'And never debate if it will help to remove darkness'.
நட்சத்திரம் கூறுகிறது “நான் என் விளக்கை ஏற்றுகிறேன் அது இருளை அகற்றுகிறதா என என்றும் நான் மருள்வதில்லை”

While God waits for his temple to be built of love men bring stones.
இறைவன் தன் கோயில் அன்பால் எழுப்பப் படுவதற்காய் காத்திருக்கிறான் மனிதன் எடுத்து வருவதோ வெறும் கல்.

I touch God in my song as the hill touches the far away, sea with it's waterfall.
இறைவனை என் இசையால் தழுவமுடிகிறது. தூரே இருக்கும் சமுத்திரத்தை மலைகள் தம் நீர் வீழ்ச்சியால் தொடுவது போல.

He who does good comes to the temple gate, He who loves reaches the shine.
நல்லன செய்வோன் இறைவன் முன்னிலை அடைகிறான் அவரை நேசிப்பவனோ கர்ப்பக் கிரகத்தையே அடைவார்.

God loves to see in me, not his servant. But himself who serves all.
இறைவன் பிரேமையில் என்னிடம் காண்பது ஒருவேலைக்காரனையல்ல, எல்லோருக்கும் தொண்டாற்றும் தன்னையே

The flower sheds all it's petals finds the fruit.
அழகிய மலர் தன் எல்லா இதழ்களையும் சொரிந்து ஒரு கனியைப்பெறுகிறது.

When death comes and whispers to me 'thy days are ended'. Let me say to him ' I have lived in love and not in mere time'. He will ask'will thy songs remain?'
I shell say 'I know not but this I know that often when I sang I found my eternity'.
”காலன் என் காதுகளில் மெல்லக்கூறுகிறான் - உன்காலம் முடிந்துவிட்டது”
நான் அவனுக்குக் கூறுவேன் “நான் வாழ்ந்தது பிரேமையில் காலத்தால் அல்ல.”
அவன் கேட்பான் “உன் கவிதைகள் நிலைக் குமா? நான் கூறுவேன்” தெரியவில்லை ஆனால் ஒன்று உறுதி நான் என் கவிதையால் தொண்டில் நிரந்தர நிலை பேற்றை எட்டி னேன்.”
கைதேர்ந்த கவிஞனால் பாங்காகச் செதுக் கப்பட்ட பக்கத்துக்குப்பக்கம் ஒளிசிந்தும் வைரமணியாய் மின்னும் உலகமகா கவியின் கவிதைகளின் ஒவ்வொரு சொல்லும் பொருள் பொதிந்த தேனெனத்தித்தித்து உள்ளத்தில் நிறைபவை. சிந்திக்கச் சிந்திக்க பொருள் அறிவு பேரொளியாய் வழிகாட்டுபவை. இதுபோல் நட்சத்திரம், அன்பு, பேருவி, துர்க்காதேவியின் திருவருட்திண்மை, இதழ் சொரிந்த கனிகாணும் முகங்கள் எனப் பல் முகங்களாக இணைந்த இனிய கவிதையா கிறது தங்கம்மா அவர்களின் தொண்டு வாழ்க்கை.

# என்னை ஊக்குவித்த இணையற்ற தலைவி

**கலாநிதி கவிஞர் வி.கந்தவனம்**

1993 ஆகஸ்ட் மாதத்தில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான நிர்வாக சபை வெள்ளி விழா மலர் ஒன்றை அனுப்பி வைத்தார்கள். உள்ளே ஒரு கடிதம். கடிதத்தைப் படித்துவிட்டு மலரை விரித்தேன். அதில் அவரது முன்னுரை இவ்விதம் தொடங்குகின்றது: இருபத்தைந்து ஆண்டுகள்! ஆம்!. எமது கண்கண்ட தெய்வம் துர்க்காதேவியின் திருக்கோயில் எழுச்சியும் வளர்ச்சியும் கண்ட காலம் எம்மை மகிழ்வித்து இறை பணியில் ஏற்றிவைத்த காலம் '

காலம் எவ்வளவு விரைவாகச் சுழல்கிறது! ஞாலம் எவ்வளவு வேகமாக மாறுகிறது! ஆனால் மனம் பதிவு செய்துகொண்ட சில நினைவுகள் மாறாத பசுமையாகவே இன்றும் இருக்கின்றன.


1974ஆம் ஆண்டில் துர்க்காதேவி ஆலய நிர்வாக சபையினர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்குப் பாராட்டுவிழா ஒன்றை எடுத்தனர். அந்த விழாவிலே என்னைக்கொண்டு வாழ்த்துப் பா பாடுவித்துச் செல்விக்கு வழங்கினர். அதில் ஒரு பாடல் நினைவலைகளைப் பசுமைப் படுத்திக் கொண்டு எழுந்தது:

நிதிமிகு கருத்தால் நெஞ்சு
நெகிழ்விரி வுரையால் விஞ்சு
மதிநல வளத்தால் கொஞ்சு
மணிக்குரல் திறத்தாற் செஞ்சொல்
அதிமது ரமதால் பக்தி
விளைத்திடும் அழகால் அம்ம
புதுநலம் தருவாய் உண்மைப்
பொருளறி திருவே வாழி!

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை நான் முதன்முதலிலே சந்தித்தது கூட்டம் ஒன்றிலேதான். அவர்கள் இல்லாத சமய நிகழ்ச்சிகள், கலைவிழாக்கள், இலக்கியக் கூட்டங்கள், பட்டி மன்றங்கள் இல்லையெனலாம். சிலவேளைகளில் அவர்கள் சொற்பொழிவாற்ற வரும் விழாக்களிலே எனது கவியரங்கமும் இருக்கும். பட்டிமன்றங்கள் பலவற்றில் அவர்களுடன் பங்குபற்றும் வாய்ப்புக்களும் கிடைத்திருக்கின்றன.

பட்டிமன்றங்கள் பொதுமக்களுக்கு நல்ல கேள்விச் செல்வத்தை அள்ளி வழங்கும் நிகழ்ச்சிகளாக அமைந்தன. இலக்கிய, சமூக விடயங்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். வாசிப்புப் பழக்கம் குறைவான மக்களும் சிலப்பதி காரம், கம்பராமாயணம்,
பாரதம், திருக்குறள் போன்ற இலக்கியங்கள் காட்டும் பண்பாட்டுக் கோலங்களை அறிந்து கொள்ளும் வகையில் விவாதங்களை நடத்துவோம். அத்துடன் அன்பு, பண்பு, அறம், நீதி நியாயங்கள் முதலியவற்றையும் எடுத்து விளக்குவோம்.

இலக்கியங்களில் தங்கம்மா அவர்கள் ஆழ்ந்த புலமை வாய்ந்தவர். அத்துடன் எடுத்த விடயத்தை அழகாக விளக்கும் பேச்சுத் திறனும் மிகுந்தவர். தங்கம்மா என்றால் கூட்டம் திரண்டுவரும் பட்டிமன்றத்தை மக்கள் மத்தியில் பிரபலியமாக்கியவர்களில் அவர் பிரதானமானவர். இவ்வித பிரபலிய நிகழ்ச்சியில் தகுதியில்லாதவர்களும் கலந்து கொண்டு பிரபலியமாக முனைந்தனர். கருத்தை விவாதிக்கத் தெரியாது கருத்தாக் களைப்பற்றிக் குதர்க்கங்கள் புரிந்தனர். அதன் விளைவாக செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு.ச. விநாயகமூர்த்தி போன்ற பண்பாளர்கள் பட்டி மன்றங்களைத் தவிர்க்கலாயினர். அவர்கள் இருவரையும் சுத்தமான சமயத்துறை சுவீகரித்துக்கொண்டது.



கவிஞர் வி.கந்தவனம்

காலப்போக்கில் அடியேனையும் செல்வி தங்கம்மா சமயத் துறைக்கு இழுத்துக் கொண்டார். எனக்குச் சமயத்துறையில் அப்பொழுதெல்லாம் பரந்த அறிவு இருக்க வில்லை. எனது மனைவிவழி உறவினர் தனலக்குமி புத்தகசாலை திரு. மு. சபாரத்தினம் அவர்கள் தனித்தனியாக அமைந்த அப்பர், சம்பந்தர், சுந்தரர் தேவாரங்களின் தொகுதிகள் மூன்றையும் திருவாசகப் புத்தகம் ஒன்றையும் தந்து உதவினார். ஆரம்பத்தில் பேச்சுக்களை நன்கு ஆயத்தம் செய்து நிகழ்த்தினேன். என்மீது செல்வி அவர்கள் வைத்த நம்பிக்கை வீண்போகவில்லை. அழைப்புகள் அடிக்கடி வரத் தொடங்கின.

ஒருமுறை வயாவிளான் வைரவர் கோயிலில் அடியேன் பேசியபின் தங்கம்மா அவர்கள் பேச நேர்ந்தது. எனது பேச்சைப் பாராட்டியவாறு தமது பேச்சை ஆரம்பித்தார். இவ்விதம் பல இடங்களில் எனது சமய அறிவுக்கு நேர்முகச் சான்றிதழ்கள் வழங்கிய தோடன்றி, தனக்கு நேரமில்லாத நாட்களில் கந்தவனத்தைக் கேளுங்களென மறைமுகச் சிபாரிசுகளும் செய்திருக்கின்றார். அவரது ஆதரவு எனக்கு மேலும் உற்சாகத்தை ஊட்டியது.

துர்க்கை அம்மன் கோயிலிலும் என்னை அழைத்துப் பேசவைத்தார். அம்மனின் ஆலய வருடாந்த உற்சவ காலத்தில் சமயச் சொற் பொழிவுகளை நிகழ்த்துபவர் பெரும் சைவ சித்தாந்த அறிஞர்கள். அவர்கள் வரிசையில் செல்வி அவர்கள் சிறியேனையும் அழைத்துப் பெருமைப்படுத்திய நாட்களை மறக்கமுடியாது.
எனது தனிப்பட்ட, பொதுப்பட்ட முயற்சிகளுக் கெல்லாம் மிகுந்த ஆதரவுதந்து ஊக்கு வித்திருக் கின்றார்.
எனது நூல் வெளியீடுகள் பலவற்றிற் பங்கு கொண்டு உரையாற்றியிருக்கின்றார். யாழ் இலக்கிய வட்ட விழாக்களுக்கு அல்லது பாடசாலை விழாக்களுக்கு அழைப்புகள் விடுத்தபோதெல்லாம் மறுக்காது முதன்மையளித்துப் பங்குபற்றிச் சிறப்பித்திருக் கின்றார்.
1978ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ஆம் திகதி எனது மகள் வாணியின் பரதநாட்டிய அரங்கேற்றமும் செல்வி அவர்களின் தலைமையிலேயே நடைபெற்றது.தங்கம்மா அவர்களின் சக்தி துர்க்கை அம்மனின் அருட்சக்தி என்பதே எனது நம்பிக்கை. அவரது அறிவு, நாவன்மை, வாழ்க்கைநிலை என்பனவெல்லாம் காரணம் பற்றியவை.
சைவநீதியை உலகமெலாம் பரப்புதற்கெனத் துர்க்காதேவியால் வழங்கப் பெற்ற நன்கொடைகள் அவை.
அவற்றை வெகு சிறப்பாகவே பயன்படுத்திச் சமயப் பணிகள் புரிந்துவரும் துர்க்காதுரந்தரியின் பெருமை சொல்லி முடியாது.

ஈழம், துர்க்காபுரம், வெளிநாடுகளென இவரது சமயப் பணிகள் முப்பெரும் பரப்புகளை அளாவியன. இவரது குரல் வளம் தங்க நாதம் போன்றது. கேட்டுக் கொண்டேயிருக்கலாம். நேரத்தை, பசியை, பிணியை, பிற கவலைகளை எல்லாம் மறக்கச் செய்யும் ஒரு மந்திர சக்தி இந்தக் குரலுக்கு உண்டு. இந்த மந்திரக் குரல் அள்ளி வழங்கும் அறிவுச் செல்வம் அளப்பரியது. வேதாகமங்கள், இலக்கண நூல்கள், சங்க இலக்கியம், சைவ சித்தாந்த நூல்கள், தேவார திருவாசகங்கள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், கம் பராமாயணம், பாரதம், இக்கால இலக்கியங்களென பண்டிதையும் சைவப்புலவருமான தங்கம்மா அப்பாக் குட்டி அம்மையாரின் அறிவு பரந்து விரிந்தது ஐயமறத் தெளிந்தது.

அதனைக் காலம் இடம் பொருள் உணர்ந்து கேளாரும் கேட்ப எடுத்துரைக்கும் மதி நுட்பமும் நாவன்மையும் கற்றோரையும் மற்றோரையும் வியப் படையச் செய்வன.

தமது சொற்பொழிவுத் திறனால் ஈழத்து மக்களைக் கவர்ந்து புகழ்பெற்ற நிலையில், வெளிநாடுகளிலும் இவரது சமயப் பணிகள் தொடரலாயின. தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து ஆகிய நாடு களிலும் அறிவொளி பரப்பி ஆன்மீக வாழ்வை நிலை நாட்டும் பணிகளிலும் துர்க்காதேவி அவரை ஈடுபட வைத்தார்.

இவரது சமயப் பணிகளுக்கு மையமாக அமைந்தது தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம். ஆலயத் தொண்டுகளில் இவருக்கு நீண்டகாலமாகவே தொடர்பு இருந்து வந்த தெனினும் 1966ஆம் ஆண்டளவில் கோயில் நிர்வாக சபையில் இவர் தனாதிகாரியாகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அதன் அபிவிருத்திப் பணிகளில் அதிகம் ஈடுபட நேர்ந்தது. 1977ஆம் ஆண்டுமுதல் நிர்வாக சபையின் தலைமைப் பதவியும் இவரை வந் தடைந்தது. 1988ல் தர்மகர்த்தாச் சபைத் தலைவரா கவும் தெரிவு செய்யப்பட்டார்.

ஈழத்துச் சைவத்துறைத் தலைவி தமது குலதெய்வ மாகிய துர்க்காதேவி குடியிருக்கும் கோயில் நிர்வாகத்துக்குப் பொறுப்பேற்றது வியப்பில்லை யென்றாலும், கோயில் நிர்வாகத் துறையில் ஆண்களே ஆதிக்கஞ் செலுத்திய நிலையை இவரது தலைமை மாற்றி யமைத்தது ஒரு வரலாற்று நிகழ்ச்சிமட்டுமன்றி மங்கையர் உலகம் பெருமிதம் கொண்டெழுந்த புதுயுகத்தின் உதயமாகவும் கருதப்படுகின்றது.

துர்க்காதேவியின் அருளால் ஏற்பட்ட இவரது நிர்வாகத்தில் ஆலயம் படிப்படியாக வளர்ச்சிய டைந்து எல்லா வசதிகளையுங் கொண்ட இணையற்ற தலமாக - துர்க்காபுரமாக மாறலாயிற்று.

சக்தி வழிபாட்டை ஈழத்திலே தழைக்கச்செய்த முதல்வர் துர்க்காதுரந்தரி. துர்க்கா தேவியின் அருளை முன்வைத்து சிவத்தமிழைச் செழிக்கச் செய்தவர். அவரின் சிவத் தமிழைக் கேட்க மக்கள் ஆர்த்தெழுந்தனர்.

எங்கனும் துர்க்காதேவி என்பதே பேச்சாயிற்று! துர்க்காதுரந்தரி என்பதே மூச்சாயிற்று! பட்டி தொட்டிகள் எங்கும் தங்கம்மா அலை!

சமயத் துறையில் பெரும் விழிப்புணர்ச்சி! பேச்சுக் கலையும் தங்கம்மா பாணியாக மாறலாயிற்று!

மக்கள் மத்தியில் அவருக்கு இருந்த மதிப்பினை வாழ்த்துப் பாடல் ஒன்றிற் பின்வரு மாறு எதிரொலிக் கச் செய்தேன்,அப்பாடல் அன்று கோவில் வீதிகளில் நடந்த சிலதேவையற்ற செயல்களைச் சுட்டிநின்றன.

## சின்ன மேளங்கள் வேண்டாம்

சின்னமே ளங்கள் வேண்டாம்
சிறுகளி யாட்டம் வேண்டாம்
வன்னவான் சிகரம் வேண்டாம்
வாணவே டிக்கை வேண்டாம்
மன்னுபேர் தங்கம் மாவை
வரவழைத் திடுக என்பார்
இன்னதோர் மாற்றம் நேர
எழுந்தனை இனிது வாழி!

மருத்துவ நிபுண ருக்குப்
பொறியியல் வல்லு நர்க்குக்
குருத்தொழி லாள ருக்குக்
குறித்துயர் படிப்புக் காண்பார்
சரித்திரம் இன்று மாறித்
தங்கம்மா வுக்குக் கற்க
வரித்தெழும் பலரைக் கண்டோம்
வளர்கலை வல்லி வாழ்க!

பொதுமக்கள் மத்தியில் தங்கம்மா அவர்களுக்குப் பெருமதிப்பு இருந்தமைக்குக் காரணம் அவரது அறிவாற்றலும் கற்றதை உணரவிரித்துரைக்கும் திறமையும் மட்டுமன்று. அவரது இன்முகம், அன்பு மொழிகள், எல்லோருடனும் இனிதாகப் பழகும் பண்பு, ஏற்றத்தாழ்வு பார்க்காத பரந்த மனப்பான்மை, மெலியார்க்கு உதவும் மனிதாபிமானம் என்பனவும் காரணங்களாகின்றன. மிகவும் முக்கியமாக, சமயத்துறையில் அவர் நடை முறைப்படுத்திவரும் சமரசக் கொள்கைகள் சமயத்தினின்றும் மக்களைப் பிரித்துவைத்த கட்டுக் கோப்புகளை உடைத் தெறிந்தன. சமூக நோய்களுக்குச் சமய மருந்தை வெகு திறமாகப் பயன்படுத்திவரும் மருத்துவர் இவர். தொண்டு நெறியே சைவநெறி என்பதனை நடைமுறையிற் செய்து காட்டிய - காட்டிவருகின்ற நாயகி இவர்.

தங்கம்மா அவர்களின் பெருமையை தங்கம்மா நான்மணிமாலை' என்ற நூலில் விளக்கும் வல்லமையை இறைவன் அடியேனுக்குத் தந்ததை எண்ணிக் கசிகின்றேன்.

காரைக்கால் அம்மையாரைத் தொடர்ந்து பெண்கள் பலர் சைவ சமயத்தைப் பேணி வந்துள்ளனர்.

பாண்டிமாதேவியார், திலகவதியார், குந்தவை தேவியார் போன்றோர் முன்னணியில் நிற்பவர்கள். இவர்கள் வரிசையில் பல நூற்றாண்டு களுக்குப்பின் ஈழத்திலே இன்று துர்க்காதுரந்தரியார். நாம் கொடுத்துவைத்தவர்கள்!

அவர் இன்னும் பலகாலம் வாழ எல்லாம் வல்ல துர்க்காதேவி அருள்புரிய வேண்டுமென்று வணங்கு வோமாக!

# கண்ணனின் கண்ணீர்



பகவான் கண்ணன் கீதைமுழுவதையும் உபதேசித்து விட்டு தேரின் மேற்குடைமீது ஏறி அமர்ந்து கொண்டான்.
போர்நடந்துகொண்டிருக்கிறது.
அர்சுனனின் மகன் போரில் இறந்து விடுகிறான். இறந்த மகனான அபிமன்யுவை தேரிற் கொண்டு வந்து புலம்பி அழுகின்றான்.
அப்போது தேரின் மேற்குடையில் இருந்து பத்துச் சொட்டுக் கண்ணீர் அருச்சுனனின் தலையில் விழுகிறது.
கண்ணன் அழுத கண்ணீர்தான்.

உடனே கண்ணா! நான் என் மகன் இறந்துவிட்டானே என்று அழுகிறேன் . மரணத்தைப்பற்றிக் கவலைப்படாதவன் நீ ஏன் அழுகிறாய்?
“அர்ச்சுனா! மனதைத்திடமாகவைத்துக்கொண்டு போர்புரிவாயாக” என்று கீதையை இதுகாறும் உபதேசித்தேன். அது இவ்வளவு விரைவாக வீணாகிவிட்டதே என்றுதான் அழுகிறேன் என்றான் கண்ணன்.

# பைந்தமிழ் சைவப்பணி புரிந்து பல்லாண்டு வாழ்க நீயம்மா

சைவமும் தமிழும் வளர்ந்தோங் கிடவும்
தன்வாழ் நாளெலாம் தொண்டாய் வாழும்
தவமகள் பிறந்தாள் தெல்லியூர் தன்னில்
தமிழ் செய்தவமாய் தமிழர்செய் தவமாய்
சிவனவன் அருளாம் கிடைத்த பெருநிதியம்
சிவத்தமிழ் செல்வி எனும் பொக்கிஷம்
அவனியில் யார்க்கும் கிடைத்தற் கரிய
அறிவுப் பெட்டகம் தங்கம் மாவே

சமயத் தத்துவம் சைவப் பண்பு
சகலரும் எளிதில் அறிந்து ஒழுக
நயமாய் பிரசங்கம் செய்திடும் நாயகி
நாமகள் எங்கள் தங்கம் மாவே
அயராது நாளும் அரும்பணி யாற்றும்
அம்மா வென்று அனைவரும் அழைக்கும்
உயர்ந்த உள்ளம் மனிதருள் மாணிக்கம்
உன்னத லட்சிய மங்கையர் திலகம்

அநாதைப் பெண்கள் சிறப்புடன் வாழ
அமைத்தார் மகளிர் விடுதி ஒன்று
அந்தணச் சிறுவர் வேதம் பயின்றிட
அங்கொரு பள்ளி கூடவே செய்தார்
மந்திர வேத மகத்துவம் அறிந்து
மகிமை பொருந்திய துர்க்கை அம்மனை
புந்தியில் வைத்துப் போற்றி வணங்கிட
பொலிவுடன் அமைந்த தங்கம் மாவே

உன்புகழ் பெருமை உன்செயல் திறமை
ஊரெலாம் அறியும் உலகமே அறியும்
அன்னையாய் வந்து அவனி எங்கும்
அமுதத் தமிழையும் சைவத் தத்துவத்தையும்
தன்னலம் அற்ற சேவை யாவே
தளராது தொண்டு ஆற்றிய சேவகி
இன்னும் எத்தனை இயம்பிட எளிதோ
ஈடிலாப் பெருமகள் தங்கம் மாவே

பல்கலைக் கழகம் கலாநிதி என்னும்
பட்டம் தந்து பெருமை படைத்தது
எல்லை யில்லா உன்புகழ் தனையே
எண்ணி எண்ணி இன்புறு கின்றோம்
பல்லாண்டு காலம் வாழ்க நீயம்மா
பைந்தமிழ் சைவம் பணிபுரிந் திடவே
தில்லைக் கூத்தன் திருவடி தினமும்
சேவிக் கின்றோம் வாழ்க நீயம்மா

**கவிஞர் வ. யோகானந்தசிவம்**

கவிஞர், கலைஞர்,
சித்தாந்தச் செல்வர் யோகானந்தசிவம்
கணிதம் (விசேட பயிற்சி)
G.A.Q, G.S.Q ஆசிரிய ஆலோசகர்
ஓய்வுபெற்றஅதிபர்- வட்டுக்கோட்டை

# தெல்லிநகர் வளர் தங்கம்மா அன்னையே

உழுகுடை பதிவளர் அன்னை துர்க்கை பதம் வழுத்தும் அம்மா தங்கம்மா
அப்பாக்குட்டி தம்பதிகள் தரணிக்கு அளித்த தங்கத்தாயவள் சிவத்தமிழ் செல்வி அன்னை சீர்சேவை செய்கின்ற தங்கம்மா காரிருள் யுத்தம் வந்தபோதும் கலங்காமனத்துடனே நாதியற்ற ஏழை மழலைகளுடன் கூடியிருந்து சேவை செய்த தியாகசெம்மல் தீந்தமிழும் சைவமும் தரணி எங்கும் புகழ்பரப்ப தன்சேவை செய்த அன்னையவள் தற்பெருமை சிறிதுமின்றி சிறியோர் பெரியோர் என்ற பேதம் மறந்து அன்புமழை பொழியும் அம்மா தங்கம்மா துர்க்கா துரந்தரி சொல்லின் செல்வியே வாழியவே அன்னையின் வழிநடந்து அன்புமயமாய்

**மாவை சோமசுந்தரம்**

# தவச்செல்வியார் தங்கம்மா அன்னை

## குறமகள்

தமிழ் கூறும் நல்லுலகெங்கும் அம்மையாரை அறியாதார் யாரும் இலர் என்றே கூறலாம். இலங்கையில் மாத்திரமல்ல ஐரோப்பா, மலேசியா, இந்தியா ஆகிய நாடுகளில் வாழும் வேற்றின மக்கள் சிலர்கூட அவரை ஓரளவு அறிந்திருக்கிறார்கள்.

இத்தகைய அன்னையாரைப்பற்றி எழுது வதற்கு என்னதகுதி எமக்கு இருக்கின்றது என்பதை நினைத்துப் பார்க்கிறேன் இயல் பாகவே எமது குலதெய்வம் குருநாதசுவாமி கோயிலைத்தவிர வேறெந்தக் கோயிலுக்கும் செல்வதில் அதிகம் ஆர்வம்காட்டாத கிரிகைச் சடங்கு வழிபாடுகளில் அதிகம் ஈடுபாடு இல்லாத இப்பிறவிக்கு துர்க்கா துரந்தரியின் ஆன்மீகத் தொண்டு பற்றி எழுதுவதற்கு என்ன இருக்கிறது. எமது இயல்புக்கேற்ற கண்ணோட் டத்தில் எழுத முயல்கின்றோம்.

முதலில் அவர் பெண்கள் முன்னேற்றத்தில் யாராலும் அணுகமுடியாத உச்சத்துக்குச் சென்றவர் என்ற ரீதியில் எம்முள்ளம் கவர்ந்தவர், எம்மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரியவர் என்னும்ரீதியில் சில அனுபவங்களை மாத்திரம் எழுதவிழைகிறோம்.

துர்க்கை அம்பாள் சன்னிதி அவருக்கு பேரும் புகழும் பெற்ற தவச்செல்வி ஆவதற்கு வாய்ப்பும் வசதியும் அளித்ததா? அல்லது இத்தகைய வசதிகளையும் வாய்ப்புகளையும் பேரையும் தனது விடாமுயற்சியாலும் ஆற்றலாலும் அம்பாளுக்கு அவர் தேடிக் கொடுத்தாரா?

இது எம்முன்நிற்கும் இலௌகீகத் தனமான ஆய்வுக்கேள்வி.

துர்க்கை அம்மன் கோயில் பிரபல்யம் அடையாத அக்காலத்தில் சூழ இருந்த கிராமங்கள் கூட அவ்வளவாக போவது கிடையாது. 1935 தொடக்கம் 1945 காலப் பகுதிகளில் எமது தாயார் சிலவேளைகளில் எமது தந்தையாரைத் துர்க்கையம்மன் கோயிலுக்குப் போகவேண்டும் எனக்கேட்பார் காரைத் தெருவிலே விட்டுவிட்டு இருவரும் மாத்திரம் போவார்கள் நாங்கள் உள்ளே இருந்து பார்ப்போம் வடலிகளும் நெருஞ்சிப் பற்றைகளும் நிறைந்த ஒரு காணியின் ஊடாக ஒற்றையடிப்பாதையால் செல்வார்கள். சிதறு தேங்காய் அடித்து கற்பூரம் கொழுத்தி வணங்கிவிட்டுவருவார்கள். தூரத்தில் கிடுகால் வேயப்பட்ட ஒருசிறு கொட்டில் மாதிரி அந்தக் கோயில் காணப்படும்.

பிற்காலத்தில் மானம்பூ எனச் சொல்லப்படும் விஜயதசமி விழா அன்று மாவைக்கந்தன் எழுந்தருளி ஊர்வலமாகத் தன்தாயாராகிய இந்தக் கோயிலுக்கு வந்து வாழை வெட்டு நடைபெறும். அப்போது ஊரவர்கள் சென்று வருவார்கள் ஆலயமும் சிறு கோயிலாகக் கட் டப்பட்டிருந்தது.

எட்டாங் கட்டையடி என்று சொல்லப்படும் இடத்தில் கோயில் கொண்ட அம்பாளின் கடாச்சம் சிறுமி தங் கம்மாவில் பதிந்தது போலும்



குறமகள்

அதனால் 1991 வரையிலான ஒரு இருபது ஆண்டுக்காலத்தில் துர்க்கையம்பாளின் சன்னி தியின் தோற்றம், பூசை முறைகள், பக்தர் கூட்டம், தொண்டர்குழு, அப்பப்பா நினைத்துப் பார்க்கவே முடியாத அளவுக்குப் பெருவளர்ச்சி பெற்றிருந்தது.

உலகம் முழுவதுமே போற்றிப்புகழும் அளவுக்கு ஆலயத்தின் கீர்த்தி பெருகிவிட்டது. இது எப்படி? மூலவரின் தெய்வீகமும் தவச் செல்வியாரின் தன்னலம் கருதாத ஈடினையற்ற சேவையும் எனப்புலனா கின்றதல்லவா.

அன்னையின் கல்வி, விவேகம், புலமை யாவரும் அறிந்ததே. 1955ம் ஆண்டு, இவர் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் ஆரியதிராவிட பாஷாபி விருத்திச் சங்கம், பண்டித- பாலபண்டித பிரவே சபண்டித பரீட்சைகளில் சித்தியெய்தி யோருக்கு தகமைச்சான்றிதழ் வழங்கு வதற்கான கூட்டம் ஒன்றை நடாத்தியது. அங்கே பண்டித பரீட்சையில் ஒரே ஒருவர் சித்தியடைந்தார் எனவும் அவரும் முதலாம் பிரிவில் அதி விசேடசித்திபெற்ற செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி எனவும் கூறி சான்றிதழும் வழங்கி தங்கப்பதக்கம் சூட்டிக் கௌர வித்தார்கள்.

நிறைந்த கைதட்டல்களும் பாராட்டுகளும் கிடைத்தன. பெண் என்பதால் நானும் கைஓயாது தட்டினேன். அன்றுதான் அவரை முதன்முதலாக காணவும் பேசவுமான சந்தர்ப்பம் கிடைத்தது. அதன்பின் அறுபது களின் முதற்பகுதிவரை பட்டிமன்றங்கள் சொற்பொழிவுகள் எனஅடிக்கடி சந்திக்கவும் சேர்ந்து பிரயாணம் செய்யவும் வாய்ப்புகள் வந்து கொண்டிருந்தன.

ஆழ்ந்த அடக்கமான ஆற்றொழுக்குப் போன்ற பேச்சும் ஒருவிடயத்தை எடுத்தலும் தொடுத் தலும் காணும் உத்திமுறைகளும் ஏற்ற இடங்களில் ஏற்றபாடல்களை எத்தனையோ நூல்களில் இருந்து எடுத்தாளும் மனனத் திறமையும் கணீர் என்ற குரல் வளமும் தமிழழகும் எம்மைக் கவர்ந்த விடயங்களாகும்.

சமயச்சொற்பொழிவுகள் நடத்தும்பேது கூட சிலர் இடையிடையே மலினமான பகிடிகளை விட்டும் பெண்கள் பற்றி இழிவான நகைச் சுவைகளைச் சொல்லியும் பக்தி உணர் விலிருந்து மக்களைப் பிரித்து சிந்தனையைச் சிதறடித்துவிட்டு பேச்சுக்களைத் தொடர்வர் இத்தகையோரின் பேச்சுக்களை ஓரிரு தடவைகள் கேட்டாலே வாழ்நாள்பூரா அவர் களைக் காணுந்தோறும் வெறுப்பு மண்டிவரும். ஆனால் நம் அன்னையோ கேட்டார்ப் பிணிக்கும் தகைமை வாய்ந்த சொற்பெருக்கை கற்புவழுவாக் கனதியுடன் பேசும்போது மக்கள் உண்மை ஒன்றித் தம்மை மறந்து கேட்டிருப்பர்.

ஒருசமயம் குரும்பசிட்டி சன்மார்க்கசபையினர் தவச்செல்வியாருக்கு ஒரு பாராட்டுவிழா எடுத்தார்கள். அறுபதுகளின் பிற்பகுதியிலா யிருக்கலாம். யாழ்குடாநாட்டின் சமயச் சொற்பொழிவாளர் இலக்கியப்புலமையாளர் எனப்பல பெரியவர்கள் வந்திருந்தனர். பேச எழுந்தவர்களில் அனேகர் தங்கம்மா அவர்கள் ஈழத்துப் பெண் பேச்சாளர்களிடையே முதலாவதாக வைத்தெண்ணப்படுவார்கள் என்றரீதியிலே பேசிவந்தனர்.

எனதுமுறை வந்தது பேசியதையே பேச முடியுமா? முன்னேறும் சமுதாயத்துக்கு இவர்பற்றிப் பேசஎழுந்தோர் அம்மையார் அவர்கள் பெண்பேச்சாளர்களுள் முதலாவதாக வைத்தெண்ணப்படுவர் எனச்சொன்னீர்கள் நான் அதை ஒப்புக்கொள்ள மாட்டேன். எனச்சொல்லி ஒரு அர்த்தமுள்ள மௌன இடைவெளியை விட்டேன்.......சிலர் சொல்லாதீர்கள் என விரல் அசைத்தனர்,,சிலர் கேள்விக்குறியாகினர்,சிலர் புன்னகைத்தனர்,(ஏனெனில் அக்காலத்தில் அடியேனும் சிறந்தபேச்சாளர் எனப் பெயர் பெற்றிருந்தேன் அதற்காகவெனநினைத்து விட்டனர்)

இதற்குமத்தியில் தொடர்ந்தேன்

சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள் ஈழத்தின் ஆண்பெண் அனைத்துப் பேச்சாளர்களையும் விடமுதன்மையானவர். ஆண் என்பதை அழுத்திக் கூறினேன் கைதட்டல்களும் ஆரவாரமும் அடங்கச்சிறிதுநேரமாயிற்று. கருமயோகிபோல அமர்ந்திருந்த தங்கம்மா அவர்களுமே சிரித்துவிட்டார்கள்.

இந்தச் சம்பவம் எம்மைப் புகழ்வதற்காகக் கூறப்பட்டதல்ல, ஆனால் இன்றும் கூட பொது வாகவே ஆண்கள் பெண்களின் உயர்ச்சியைப் புகழ மாட்டார்கள். மாறாக ஏதோ ஒரு குறையே சொல்லும் வழக்கம் காணப்படுகிறது.

பேசவொண்ணாப் பெருமைக்குரிய அன்னை யாரின் சொற்பொழிவுத்திறன் தொண்டர் சேவை பிறருடன் பழகும் தன்மை அவருள்ளே இருந்து உட்சாகமாக இயக்கிக்கொண்டிருக்கும் சக்தி அருமையான பண்புகள் அதனால் விளைந்த அஞ்சாத வீரம் அதனூடாக முகிழ்ந்த ஆளுமை இவையாவும் எல்லாராலும் எழுதப் பட்டும் பேசப்பட்டும் வந்திருக்கின்றன அம்மை யாரைக் கனம்பண்ணுவதற்காகவே துர்க்கை அம்பாள் திருத்தலத்தில் நடக்கும் சில விழாக்களுக்கும் நாம் போவதுண்டு அதைத் தவிர இலக்கிய விழா சமயவிழாக்கள் நடைபெறும் 1980 என நினைக்கிறேன். தமிழ்நாட்டில் இயங்கிவந்த சைவசித்தாந்த சமாஜத்தில் ஈழத்தவர்களும் இருக்கின்றார்கள் அதன்பவளவிழாமகாநாடு தவச்செல்வியாரின் ஒருங்கிணைப்பிலும் நிர்வாகத்திலும் துர்க்கா தேவஸ்தானத்தில் மூன்று நாட்கள் தொடர்ந்து நடந்தது.

இந்தியாவில் இருந்து சமயாச்சாரி யார்களும் சித்தாந்தப் பேரறிஞர் களும் வருகை தந்தனர். அம்மையாரின் பக்கபலமாக யாழ்ப்பாணப் பிரமுகர்களும் பொறுப்புகளைப் பங்குபோட்டு திறமையாகச்செய்தார்கள். அன்னையோ மூன்று வேளையும் உணவளித்து ஓடியோடி உபசரித்து எல்லாச்செயற்பாடு களையும் மேற்பர்வை செய்து தாமும் உரையாற்றி பெரும் சேவை செய்தார்கள்.

தமிழ்நாட்டாரும் ஈழத்தவரும் அம்மையாரின் முன் சாஷ்டாங்கமாக வணங்கியவர்களும் காலைத்தொட்டு வணங்கியவர் களுமாக எமக்கு ஆச்சரியத்தைத் தந்தனர். பழுத்த சமயவாதிகள் ஆண்பெண் எனப்பார்ப் பதில்லை. சுத்தமான ஆன்மாக்களையே காண் கின்றார்கள். அர்ப்பணிப்பால் ஒளிவீசும் ஆண்மாவைத்தான் கண்டார்கள்.

சேலை உடுத்திய ஒருபெண் உருவத்தையல்ல அதேபோல் அவர்களும் அகங்காரமோ ஆணவமோ அழிந்த பணிவுள்ள ஆன்மாக் களாகத் தென்பட்டார்கள் இது எமக்கொரு புதிய அனுபவமாகவும் சிந்தனைத்தெளிவை உண்டாக்குவதாகவும் அமைந்தது.

இந்தியாவிலே சமீபத்தில் ஒரு கருத்துக் கணிப்பு நடைபெற்றது. அதில் பெண்களின் பல்துறைக்கல்விஆர்வமும் வேலை வாய்ப் புகளும் இது எப்படி எனும் ஆய்வு "விடுதலை பெற்ற பெண்களிடம் இருந்து நாட்டைக் காப்பாற்றுவோம்" என எஸ். குருமூர்த்தியே அலறும் அளவுக்கு இவ்வளவு காலமும் ஆண்களின் கோட்டைகளாக விளங்கிய எல்லாத்துறைகளிலும் எல்லாப் பதவிகளிலும் பெண்கள் நுளைந்து விட்டார்கள் என்பதே அதன் முடிவாகும்.

யாழ்ப்பாணத்திலேயே முதன்முதலாக ஆன்மீ கத்துறையில் ஒருபெண் கோயில் நிர்வாகியா கப்பதவி ஏற்றதும் மக்களின் ஆத்மீக வளர்ச்சிக்குப் பாடுபடுவதும், காலத்தின் தேவையை அறிந்து அதரவற்றவர்களுக்கு உணவும் உறையுளும் கொடுத்து அடைக் கலம் தருவதும் அவரது தலைமைத் துவப்பண்பானது அற்பணிப்புடன் கூடியதாக அமைந்ததே காரணம்.

தம்மையும் தம்குடும்பங்களையும் வாழ வைக்கும் இதர நிர்வாகிகளைப் போலன்றிக், அவரன்புள்ளம் விகசித்து விகசித்து அனைத்து உயிர்களுக்கும் தாயன்பை வளங்கும் அர்ப் பணிப்பு மயமானது.
பெண்களின் சமத்துவத்தை லௌகீகமாகப் பார்ப்பது நம் இயல்பு , ஆயினும் அன்னையின் ஆத்மீகவிளக்கத்தைக் கூட அந்த இயல்போடு எண்பதுகளில், முதலாவது கோயில் நிர்வாகி என பிதற்றித்திரிந்தேன். சமீபத்தில் எங்கள் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களும் யாழ்பாணமரபில் ஆண்களுக்கே உரியதெனக் கருதப்பட்டுவந்த கோயில் மணியம்- எசமானர் பதவியை ஏற்று, ஒரு கோயில் என்பது சமூகமேம்பாட்டுக்கான நிறுவனம் என்பதையும், அது பங்குகொள்ளல் முறைமையில் அமையவேண்டும் என்பதை எடுத்துக்காட்டிய பெருமாட்டி அவரே. இதுவே அவர் சாதித்த புரட்சியின் முக்கியத்துவம் என எழுதியுள்ளார்.
-ஜோதித் தியானத்தில்- ஈடுபட்டபோதுதான் இதயத்தில் எழும் அன்பெனும் ஒளி எப்படி உலகத்தில் உள்ள அனைத்து உயிரினங் களையும் பலபூண்டுகளையும் கூடத் தழுவித்தழுவி தான் என்பது அழிந்து பிரகாசிக்கின்றது என்பது புரிந்தது.
வலிவடக்கு மக்கள், பெரும் அறிஞர்களோ, பாமரர்களோ காலங்காலமாக யாவரும் போற் றும் பண்புடையாளர்களாகத்தான் திகழ்கிறார் கள். திருப்பணிச் சபையினர்சிலர் தலைமைத் துவப் பண்பு நிறைந்தவர்களாக இருந்து தமது உலக இயல் தன்மை காரணமாக முழுமை யான சேவையை நல்குவதில் சிரமத்தை உணர்ந்தவர்கள் அன்னையில் உள்ளார்ந்த அற்றல்களையும் ஆத்மீக உணர்வுகளையும் ஆர்வத்தையும் அர்ப்பணிப்புகளையும் உணர்ந் தவர்கள்.
இதனை இதனால் இவன் முடிக்கும் எனக்கருதி அதனை அவன் கண் விடல்- என்றவாறு பெண் எனில் அடக்கி ஒடுக்கி உச்சந்தலையில் அடிக்க வேண்டும் எனும் அநாகரிகம் தெரியாதவர்களாகையால் அன்னையிடமே முகாமைத்துவத்தை அளித்து தாமும் இணை ந்து சேவைசெய்து அம்மையாரின் நவம் நவமான சேவைக்கு உறுதுணையாக நின்று உதவியும் புரிந்து வருகிறார்கள் நன்றி.
தவச்செல்விகளாக வாழ்ந்தவர்கள் நீண்ட காலம் சீவித்திருந்த சித்தர்களாக விளங் கியவர்கள் அவ்வண்ணமே தங்கம்மா எனும் தவச்செல்வியாரும் முத்துவிழா மட்டுமல்ல நூற்றாண்டுவிழாவையும் கண்டு களிக்க இறைவனை வேண்டுகின்றோம்.

# அவுஸ்திரேலியாவில் இருந்து "அபயக்கரம்" அனுப்பும் ஆசிச்செய்தி

சிவத்தமிழ்ச்செல்வி, சிவஞானவித்தகர்,துர்க்காதுரந்தரி என பல சிறப்புப்பெயர்களால் அழைக்கப்படுபவர் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி. முத்தமிழ்வித்தகராகிய சிவத்தமிழ்ச்செல்வியின் 80வது பிறந்தநாள் வைபவத்தைஒட்டி துர்க்கா புரத்தில் பெருவிழா எடுக்கப்படும் இவ்வேளையில் (7.1.2005) அவுஸ்ரேலியாவில் இருந்து அம்மையாருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் -அபயக்கரம்- நிறுவனம் பெருமிதம் அடைகிறது.
தொண்டில் உறைவிடமாக விளங்கும் அம்மையார் உலகெங்கும் இந்துமதப்புகழ் பரப்பி தெய்வீகத்தொண்டு ஆற்றுவதோடு, அறப்பணியையும் வலியுறுத்தி துர்க்காபுரத்தில் அளப்பரிய சாதனையையும் நிலைநாட்டி உள்ளார். -ஏழையின் சிரிப்பில் இறைவனைக்காணலாம்- என்ற தத்துவத்தை எடுத்துரைத்தார். இதன் விளைவாகதுர்க்காபுரம் இன்று வற்றாத சுனையாகத்திகழ்கிறது. கருணைத்தெய்வமாகிய துர்க்கை அம்பாள் அடியார்கள் மூலம் பொருளை அள்ளிப் பொழிய அம்மையாரின் அரவணைப்பில் -மகளிர் இல்லத்தில்- 65 அதரவற்ற மாணவிகள் மனநிறைவாக வாழ்கிறார்கள். கதியிழந்த இளம் பெண்கள், அநாதரவான அன்னையருமாக மொத்தம் பத்துப் பெண்கள் அன்னையர் இல்லத்தில் புகலிடம் கொண்டு மனஅமைதியுடன், இல்லத்தையே நம்பி வாழ்பவர்கள். அம்மையாரின் கனிவில் தேவி துர்க்கையின் அருளைக்கண்டு அவர்கள் மனம் குளிர்கிறார்கள் -தொட்டனைத் தூறும் மணற்கேணி- என வாழ்த்தி வணங்குகிறார்கள். இந்நிலையில் நாமும் தனக்கெனவாழா உத்தமியாகிய அன்னையை -வாழ்க பல்லாண்டு- என வாழ்த்தி அவரின் தெய்வீகப்பணி மேலும் தொடர உதவிக்கரம் கொடுப்போமாக.


**செ. கணேசன் ராஜா**

ABAYAKARAM
44 Downing Street
Epping> NSW 2121
Australia

தலைவர் அபயக்கரம் நிறுவனம்-

# பழமொழிகளும் உண்மை விளக்கமும்

ஒரு நாட்டின் உயர்ந்த பண்பையும், அறிவாற்றலையும், நாகரீகச்சிறப்பையும் அந்த நாட்டுப் பழமொழிகள்மூலம் அறியமுடியும். பழங்காலம்தொட்டு வழங்கிவரும் இப்பழ மொழிகள் பல சிதைந்தும்,மாறியும், உருக் குலைந்தும். பொருள் வேறுபட்டும் வழக்கில் இருந்து வருகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கு பார்ப்போம்.




## ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்

-ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்- என்று ஒரு பழமொழி வழங்கி வருகிறது.

இதன்படி ஒரு வயித்தியன் முழு வைத்தியனாக இரண்டாயிரம் பேரைக் கொல்ல வேண்டும். இவ்விதம் சமுதாயத்தில் பலரைக் கொன்ற பிறகுதான் வைத்தியனாக முடியும் என்ற நியதி இருக்குமானால் அதை எந்தச் சமுதாயமும் ஏற்காது.

எனவே இந்தப் பழமொழியைச் சிந்தித்துப் பார்த்தால் ஓர் உண்மை புலனாகும். -ஆயிரம் வேரைக் கண்டவன் அரை வைத்தியன்- என்றே முன்பு வழக்கத்தில் இருந்துவந்தது.

பிறகு இது -ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்- என்று சிதைந்து வழங்குவதை அறிகிறோம்.



## காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

-காற்றுள்ள போதே தூற்றிக் கொள்- என்ற பழமொழி எதனைக் குறிக்கின்றது?

நெற்கதிர்களை அடிப்பவர்கள் நெல்லையும் கருக்காயையும் பிரிப்பதற்கு காற்றடிக்கும் நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு தூற்றிக் கொள்ளவேண்டும் என்று இதற்குப் பொதுவாகப் பொருள் கொள்கிறார்கள். நுண்மான் நுளைபுலம் மிக்க நம் ஆன்றோர்கள் இதைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்று நாம் சிந்திக்க வேண்டும்.

ஒரு மனிதன் அவனுக்கு மூச்சு இருக்கும் போதே -உயிர் உள்ள போதே- ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை நீக்க அரும்பாடு படவேண்டும். உடலில் உயிர் இருக்கும்போதே அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகிய மன மாசுகளை நீக்க முயலவேண்டும். இத்தகைய கொடிய குற்றங்களை நீக்கி மனத்துக் கண் மாசு இல்லாதவராக வாழவேண்டும். என்னும் கருத்தை வலியுறுத் தவே இந்தப் பழமொழி தோன்றியது.

## தீர்த்தத் திருவிழா




## இனிய வாழ்த்து

இனிய தமிழ்.
இன்பத் தமிழ்.
செல்வமாக
சிவத்தமிழ்ச் செல்வியாக
விளங்கும் அழகு தமிழ்.
தமிழ்க் கடவுள் குமரன் வளர்த்த தமிழோடு இணைந்திருப்பதால் குமரன்போல் குன்றாத இளமையுடன் இருக்கின்றார்.
அஸ்டமாசித்திகளையும் பெற்ற தாயே! நீ அகில லோக நாயகியின் திருவடியே சரண் என்று இருந்தாய். தாயே! அதனால்தான் என்னமோ
கலைமகள் உன் நாவிலும்
அலைமகள் நீ இருக்குமிடத்திலும்
மலைமகள் உன்னைச் சூழவும் இருக்கின்றனர்.
இதற்குமேல் உன் பெருமைகள் கூற எனக்கு வார்த்தைகள் ஏது!

அன்பன்
**சிவகுருநாதன் சக்திவேல்** - யேர்மனி

# ஒரு மிருகம் + ஒரு தெய்வம் = ஒரு மனிதன்

"இலக்கியச் செம்மல்"
இந்துமகேஷ்



எங்கும் சிரிப்பொலி கேட்கிறது
இது மகிழ்வில் விளைந்த சிரிப்பல்ல.
மற்றவர்களை பரிகசித்துச் சிரிக்கிற சிரிப்பு.
பத்திரிக்கைகளில், வானொலிகளில், இணையத்தளங்களில் எங்கும் இந்தச் சிரிப்பொலி கேட்கிறது.
பரிகாசச் சிரிப்பு என்றா சொன்னேன்?
இல்லை இது பகுத்தறிவுச் சிரிப்பு என்கிறார்கள் அவர்கள்.
விரதம் இருப்பவர்களை நோன்பு நோற்பவர்களை பட்டினிகிடப்பவர்களைப் பார்த்து அவர்கள் பரிகசிக்கிறார்கள்.
'உங்கள் கடவுள் இதைச் சொன்னாரா என்ன?' என்று கிண்டலாகக் கேட்கிறார்கள்.
'உடலை வருத்தாவிட்டால் உங்கள் கடவுள் அருள்செய்யமாட்டாரா?' என்கிறார்கள்.
கூலிவேலை செய்தாவது உடலை வருத்தி உழைக்காமல் கூழோ கஞ்சியோ குடிக்க முடிகிறதா நம்மால்?
கேவலம் வயிற்றுப்பாட்டுக்கே இந்தப் பாடுபடுகிறோமென்றால் வாழ்வில் கரைசேர்வதற்கு இயன்றளவு உடலை வருத்தவேண்டாமா நாம்:?
சும்மா உட்கார்ந்திருந்தால் சுகம் வருமா என்ன?
உடல் உறுதி பெற்றால்தான் மனம் உறுதி பெறும். மனம் உறுதி பெற்றால்தான் எண்ணங்கள் உறுதி பெறும். எண்ணங்கள் உறுதி பெற்றால்தான் செயல் உறுதிபெறும். செயல் உறுதிபெற்றால்தான் வாழ்வு உறுதி பெறும். வாழ்வு உறுதி பெற்றால்தான் ஆன்மா உறுதி பெறும். ஆன்மா உறுதி பெற்றால்தான் உலகம் பயன் பெறும்.
நமக்கும் மேலான ஒரு சக்தி நம்மைப் படைத்துக் காத்து அழித்து அருள்கின்ற ஒரு சக்தி.
இயற்கை என்று பகுத்தறிவுவாதிகள் சொன்னாலும் இந்த இயற்கையைக் கட்டியாளுகிற சக்தி
அதன் பெயரே கடவுள்.
சக்தியும் சிவமுமாய் இரண்டறக் கலந்து ஒருருவாய் எமையாளும் சிவசக்தி.
அந்த ஆதிமூலத்தைக் கண்டறிதல் என்பது அத்தனை இலகுவானதல்ல.
விரதங்கள், நோன்புகள் என்ற பெயரில் தம்மை வருத்திக் கொள்பவர்கள் எல்லாம் தத்தம் உடல்களை உறுதிசெய்து கொள்கிறார்கள்.
அலையும் மனத்தை ஒருநிலைப்படுத்தி ஆன்மாவை அறிந்துகொள்கிறார்கள்.
ஆன்மாவை அறிந்தபின் அதில் இரண்டறக் கலந்திருக்கும் இறைவனைக் கண்டு கொள்கிறார்கள். பரிகசித்துச் சிரித்துக் கொண்டிருப்பவர்கள் சிரித்துக்கொண்டிருக்கட்டும்.
தத்தம் அறியாமையை மற்றவர்களது மூட நம்பிக்கைகள் என்று நம்பிக்கொண்டிருப்பவர்கள் அவர்கள்.
ஒரு காரியத்தைச் செய்துகொண்டு அதிலுள்ள தவறுகளைக் கண்டுபிடித்து நிவிர்த்தி செய்வது என்பது வேறு. எட்ட நின்றுகொண்டே குற்றம் கண்டுபிடித்துக்கொண்டிருப்பது என்பது வேறு.
முன்னதால் காரியங்கள் முழுமை பெறும். பின்னதால் எல்லாமே குழப்பத்தில் போய் முடியும்.
வழிபாடு என்பது இயற்கைக்கு அல்லது இறைவனுக்கு நன்றிசொல்வதற்காக உருவான கூட்டு முயற்சி.
காலத்தினதும் சூழலினதும் நிலைக்கேற்ப அவைகளில் மாற்றங்கள் உருவானதேயன்றி அடிப்படையில் மார்க்கம் என்பது ஒன்றுதான்.
தனக்காகப் பிற உயிர்களைப் பலிகொள்ளாமல் பிற உயிர்களுக்காகத் தன்னைத்தானே வருத்துதல் என்பது பேரன்பின் வெளிப்பாடு.
இந்தப் பேரன்பே இறைவனோடு தன்னை ஐக்கியப்படுத்தும் என்ற நம்பிக்கையின் பிரதிபலிப்புத்தானே இந்த விரதங்கள் நோன்புகள்.
இது ஏன்? அது ஏன்? என்று விளக்கம் கேட்டுக்கொண்டு, அந்த விளக்கத்தில் திருப்தி வந்தால்மட்டுமே அதை ஏற்றுக்கொள்வோம் என்பவர்கள் இந்த உலகத்தில் ஒரு அர்த்தமற்ற வாழ்க்கையை முடித்துவிட்டுப் போகப்போகிறவர்களேயன்றி அவர்களால் அவர்களுக்கு பயன்விளையப் போவதில்லை.
'என் செல்வமே!' என்று வாரியணைத்து மகிழும் தாயிடம், 'அம்மா நான் எங்கிருந்து வந்தேன்?' என்று குழந்தை கேட்பது நியாயமான கேள்விதான். 'என் வயிற்றுக்குள்ளிருந்து வந்தாயடா... பத்துமாதம் நான் உன்னைச் சுமந்தேன்!' என்று அவள் சொல்வதும் சரிதான்.
குழந்தை அம்மாவின் வயிற்றின்மீது தலைசாய்த்து அவளைக்கட்டிக்கொண்டு சிரித்தால் அது அவளுக்கும் ஆனந்தம் குழந்தைக்கும் ஆனந்தம். ஆனால்....

ஆனால் இதற்கு மாறாக, "உன் வயிற்றுக் குள்ளா நான் இருந்தேன் இந்தச் சின்ன வயிற்றுக்குள்ளா? என்னால் நம்பமுடிய வில லையே எங்கே என்னை அதற்குள் இருத் திக்காட்டு. அப்போதுதான் நான் நம்புவேன்' என்று வம்பு பண்ணிக்கொண்டு தாயை உதறி விட்டு வரும் பிள்ளையை என்ன செய்வது?

இன்னும் சிரிப்பொலி கேட்கிறது..
இனியும் அதுகேட்கும்.
ஏனெனில் மனிதன் தனது அறியாமையிலிருந்து மீள்வது அத்தனை சுலபமல்ல. தனது அறியாமை நீங்கும்வரை அவன் மற்றவர்களைப் பரிகசிப்பதும் ஓய்ந்துவிடப் போவதில்லை.
திருவிழாக்கள் அடிக்கடி நடக்கின்றன.
விலங்குவாகனத்தில் ஏறி வந்து அசுரர்களை அழிக்கின்ற தெய்வங்கள் வெளியே வந்து வேடிக்கை காட்டுகின்றன.
"இதெல்லாம் என்ன? அர்த்தமற்ற கூத்துக்கள்?"
-திருவிழாவோடு கூடவே கேள்விகளும் வரு கின்றன. பகுத்தறிவுகள் கேள்விகளோடு வந்து வரிசையாக நிற்கின்றன.
மனிதன் எப்போது வந்தான்? எங்கிருந்து வந்தான்? எங்கே போய்க்கொண்டிருக்கிறான்?
இன்னும்தான் தெளிவான பதில் இல்லை.
ஆனால் இந்த உடல் ஒரு விலங்கை எப்போதும் அடையாளப்படுத்தி நிற்கிறது.
'ஏய் குரங்கு... ஒரு இடத்திலை ஒழுங்காய் இரு!' சின்னவயதில் அப்பா அம்மாவிடம் இப்படி ஏச்சு வாங்காத எவராவது உண்டா?
கிருஷ்ணருக்கு மாடுகளும் கிறிஸ்துவுக்கு மந்தைகளும் என்று எங்கேயும் மக்கள் மாக் களாகத்தானே வர்ணிக்கப் பட்டிருக்கிறார்கள்.
மக்களுக்கும் மாக்களுக்கும் உள்ள வித்தி யாசம் என்னவென்றால் ஒரு கால் (ா)தான்?
விலங்குகளுக்கு கால்கள் நான்கு மனிதனுக்கு இரண்டு.
நான்கு கால்களில் நடந்த மனிதன் எப்போது நிமிர்ந்தான்?
அவன் தனக்குள் இருக்கும் தெய்வத்தைக் கண்டபோது!
உடல் என்னும் விலங்கில் தெய்வம் என்னும் ஆன்மாவைச் சுமந்துகொண்டு மனிதன் என்ற பெயரில் உலாவருகிறான் அவன்.
ஆனால் தன்னை வெறும் உடலாகவே கருதும் மனிதன் தன்னுள்ளிருக்கும் தெய்வத்தை உணர்வதில்லை. தன் உடலை தானாக எண்ணு பவனுக்கே நான் எனும் ஆணவம் மிகுந்து நிற்கும்.
நான்தான் நான் என்பான் அவன். அவனது விலங்குடலே அவன் என்பது அவனது முடிவு. தன்னுள்ளிருக்கும் தெய்வத்தை அவன் அறிவதில்லை.
'பலிகொள்ளுதல் பாவம்' என்னும் மனிதன் தனது பகையறுக்கத் தன்னினத்தையே பலி கொள்ளத் தயங்குவதில்லை.
(இதுவே அவனது கடவுள்பற்றிய அறியா மைக்கு முதற்சாட்சி)
தன்னுள் இருக்கும் தெய்வத்தைத் தன்னால் அறிய முடியாதபோது....
அவன் விலங்காகவே வாழ்ந்து முடிக்கிறான்.
அறிந்துகொண்டவனோ தன் உடலைத் தான் ஏறிவரும் வாகனமாகவே எண்ணுவான்.
உடலின் விளைவான காமமுதலாகிய உணர்வு களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அவன் பிரயத்தனப் படுகிறான்.
முதலில் தன்னுள் இருக்கும் தீய உணர்வுகள் என்னும் அசுரர்களை வேட்டையாடுகிறான்.
அதன் பிறகு தெய்வநிலைக்கு எதிரான மாயை களை அவன் வேட்டையாடியாக வேண்டி யிருக்கிறது.
இந்த வேட்டைத் திருவிழாவில் அவனுள் இருக்கும் தெய்வம் வெற்றிபெற்றால் அவன் தெய்வமாகவே மாறிவிடுகிறான்.
கொடிய மிருகமாக அலையும் அவனது உடலும்கூட அவனது தெய்வீக நிலைக்கு முன்னால்
சாதுவாக அடங்கிக் கிடக்கிறது.
தானே தெய்வம் என்ற உண்மை தெரிந்த பின்னால் உடல் என்னும் வாகனம் ஏறிவந்தவன் அதை எறிந்துவிட்டு தெய்வமாகவே ஆகிவிடு கிறான்.
மனிததெய்வங்கள் வாழும் நெறியைக் காட்டி விட்டு மறைந்துவிடுகின்றன.
மனிதவிலங்குகளோ தம்மைத்தாம் அறியாமல் மற்றவர்களை வதை செய்து கொண்டிருக் கின்றன.


**தாயகத்தில் இருந்து**



ஆசிரியர்
செஞ்சொற் செல்வர்
திரு. ஆறு. திருமுருகன்

உதவி ஆசிரியர்
சைவத்திரு. கா. சிவபாலன்

# அருள் ஒளி

மாதாந்த சஞ்சிகை

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை -இலங்கை

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா
அப்பாக்குட்டி அவர்களின்
**முத்துவிழாச்** சிறக்க எங்கள் நல்வாழ்த்துக்கள்.

# IMPORTAS GmbH



சுவிஸ் நாட்டில் நீண்டகால அனுபவமும், மக்களின் நம்பிக்கையினைப் பெற்ற **IMPORTAS GmbH** நிறுவனத்தின் யேர்மனி கிளையின் புதிய உதயம்

**Kings Niru Suryaa TRS Subash**
பொருட்கள் நேரடி
இறக்குமதியாளர்கள்

**உங்கள் வியாபார ஸ்தாபனங்களுக்குத் தேவையான பொருட்களைபெற நாடவேண்டிய ஸ்தாபனம்**

**Roettgen 143 EKZ**
**42103 Wuppertal - Germany**
**Tel:0202 265 53 84**
**Fax:0202 265 53 85**
**Cell:0176 2321 70 84**




## PulseTeleSys
Amplify your Voice




**எங்கள் இணைப்பின் மூலம்**
**உலகெங்கும்**
**இலவசமாக இணைந்து பேசுங்கள்!**

**DSL இணைப்பு கொண்ட அனைவரும் எமது சேவையால் பயன்பெறலாம்**



உலகின் எப்பாகத்திற்கும் Pulse இருந்து Pulse க்கு தொடர்பு கொண்டால் இலவசம். பின்வரும் நாடுகளில் Pulse தொடர்புகளை ஏற்படுத்த அந்ததந்த நாடுகளின் தொலைபேசி இலக்கங்கள் தந்துள்ளோம்.

Partners country and Phone numbers, Paris :- +33-1-42091644
London :- +44-208-5722714 Holland :- +31-646160802
Swiss:- 0041-318396255 - Swiss:- 0041-797752167
Canda:- +1-4168880510 India:- +91-44-52083460

Pulse இருந்து ஏனைய தொலைபேசிக்கு ஒவ்வொரு நாட்டுக்கும் உரிய கட்டணங்கள்...
ஐரோப்பா எங்கும் 0.02 Cts மட்டுமே. கனடா 0.02 Cts மட்டுமே. இந்தியாவிற்கு 0.12 Cts - கைத்தொலைபேசிக்கு 0.14 Cts
இலங்கை 0.13.Cts. Handyக்கு 0.13 Cts

(Main Branch, Gemrany)
PulseTeleSystems ,
Schloßbleiche 18,
42103, Wuppertal.
Germany. Ph:- +49-202-7053631 Mobile: - +49-176-23217085

# S.K.Silks Paradise

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா
அப்பாக்குட்டி அவர்களின்
**முத்துவிழாச்** சிறக்க எங்கள் நல்வாழ்த்துக்கள்.

S.K.Silks Paradise
Adler str 33
44137 Dortmund
Tel:0231-9501647 Fax:0231- 9501648

# Nea Namada



*Zentrum für Kosmetik und Ayurvedische Anwendungen*
**ஷீபிலா துஷ்யந்தன்**
Dipl.Kosmetikerin,
Ayurveda therapaheutin

Tel: **02261- 81 67 27**
Fax:02261- 81 67 26
**Nea Namada**
Privathotel Rothstein
Hückeswagener Str.4
**51647 Gummersbach**



# புண்ணியமே உருவாய செல்வி

சி. அப்புத்துரை

சிவத்தமிழ்ச் செல்விதுர்க்கை சீர்பரவு மன்னாய்
தவத்தோ டியைவாழ்வைத் தாங்கிச் - சிவப்பேற்றுச்
செல்நெறியி லுய்த்தெமது தீவினைதீய்த் தாய்வாழி
எல்லோரும் வாழ்த்துகின்றோம் ஈங்கு

திருக்கோவிற் தொண்டென்ன தீரமிகு சேவைப்
பெருக்கம் நினைத்தாரும் பேறாம் - விரும்புமிக
நாளும் நவநவமாய் நம்செல்வி ஆற்றுசெயல்
ஆளும் அருமைநயப் போம்

அனாதரவுச் சேய்களுக்காம் ஆனதுணை யானாய்
சனாதன சைவசிவச் செல்வி - வினாவாகும்
மூத்த உறுப்பினரின் மூதுணர்வை மாற்றியிறை
ஏத்த வழிசமைத்தா யே

ஊர்நடுவே நன்னீர் உளநிலைய மாமென்னச்
சீர்குலவு சால்புச் சிவச்செல்வி - பார்குளிரத்
தாங்கு தலைமையினைத் தாழ்மையொடு தக்கவைத்தாய்
வீங்குபுகழ் விஞ்சுகின்ற தே

புண்ணியமே யோருருவாய்ப் போந்ததுவோ பூவிலுறை
வண்ணமகள் நாமகள்தான் வந்தனளோ - எண்ணியெண்ணிச்
சிந்தித்தல் வேண்டா சிவச்செல்வி யேயெமது
வந்தனைக்கு வல்லமைசேர்ப் பாள்

பல்லாண்டு பாடுகின்றோம் பாவைதுர்க்கா பக்திவழிச்
சொல்லாண்ட தூயை துரந்தரியே - பல்லாண்டு
வாழ்ந்தெமது வாழ்வுவளம் வாய்ந்ததிரு வார்ந்துநிற்பச்
சூழ்ந்து துயர்களைகு வாய்

## தொடர்க தூயமா தொண்டு

துர்க்காதுரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 80 ஆவது பிறந்தநாளுக்கு சிவத்தமிழ் மூலம் வாழத்துவதில் அகமகிழ்கின்றோம். சிவத்தமிழ்ச் செல்வியின் சீரியபணியால் தமிழும் சைவமும் அகமகிழ்கின்றது. துர்காதுரந்தரியின் தூயமா தொண்டு தொடர எல்லாம் வல்ல அருள்மிகு துர்க்காதேவியை வணங்கி திரு.முருகேசபிள்ளை குடும்பத்தினர் சார்பிலும் எங்கள் சார்பிலும். வாழ்த்து கின்றோம். வாழ்க பல்லாண்டு!

கனடாவில் இருந்து
கதிர் துரைசிங்கம்.



## நாவலர் நீதி மொழிகள்

இந்தச்சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்குமென்பது விளங் காமையால். நாம் எக்காலத் திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

தீவிரமாயேனும் மந்தமாயே னும் நல்வினை இன்பத்தை யும், தீவினை துன்பத்தையும் வருவிக்கும்.

நன்மை செய்வதற்குச் சமயம் வாய்க்கும் பொழுது செய்யாது விடின், பின் ஒரு காலத்தில் அது வாய்ப்பது அரிது.

சோம்பலே தீமைக்கும் துன் பத்திற்கும் பிறப்பிடம்.

தங்கள் நயத்தின் பொருட்டு மாத்திரமன்றி பிறர்நயத்தின் பொருட்டும் பிரயாசப்படுபவர் களே உத்தமர்.

எவ்வளவு அதிக இரகசிய மாகச் செய்யப்படும் நன்மை களையும் முற்றறிவு கொண்ட கடவுள் அறிந்து பயன் அளிப்பார். பிறர் அறிந் தென்ன அறியாதிருந்தென்ன.

தன்பொருட்டு மாத்திரம் பிரயா சப்படுபவன், அற்ப இன்பத்தை மாத்திரம் அனுபவிப்பான். அவ்வற்ப இன்பமோ மிக இழி வானது.

நன்றி:வெற்றிமணி 1.09.1972

# "அபிராமியானா" ஒரு யேர்மனியப்பெண்!!



**இந்துசமய முறைப்படி வேற்று மதத்தைச் சேர்ந்த கிறிஸ்ரா செலர். சுற்காட் ஸ்ரீசக்தி விநாயகர் ஆலயத்தில் பக்தர்கள் புடைசூழ தீட்சை பெற்று இந்துவாக மாறும் காட்சி**

இந்து சமயம் பல நூற்றாண்டுகாலமாக உலகளாவிய உன்னத சமயமாக விளங்குகிறது. ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதியாய் அங்கு இறைவன் அருளாட்சி செய்கின்றான்.
எந்தக் காலத்திலும் பிரச்சாரங்கள் இந்து சமயத்திற்கு இருந்ததில்லை! பிறரைச்சார்ந்து!! வளர்ந்ததும் இல்லை!!!.அதன் உண்மைப் பொருளை அறிந்த பல மேற்கத்தவர் இந்து சமயத்தின் தத்துவங்களால் ஈர்க்கப்பட்டு காலத்துக்கு காலம் இந்து சமயத்தை தாமாகவே வந்து ஆதரித்து ஐக்கியமாகியுள்ளனர் என்பதனைச் சரித்திரம் சொல்லும்.
எந்த மதத்தினையும் புண்படுத்தாது, சகல மதங்களை நேசிக்கும் உன்னதமான ஒரு சமயம் இந்து சமயம். புலம்பெயர்ந்த தமிழர்கள் இங்குள்ள வாழ்வியல் முறைகளினால் பலர் பிறசமயத்தை தழுவியுள்ளனர். இது அவர்களது சுதந்திரம். எப்படி இங்குள்ள சூழல் நம்மவர்களை வேற்று மதத்திற்கு மாறவழி வகுத்ததோ, அதே நேரம் யோர்மன் மக்கள் பலர் இந்து சமயத்தின் மீது கொண்ட அளவற்ற பக்தியாலும் நேசத்தாலும் இந்து சமயத்தைப் பரந்த அளவில் புரிந்து கொண்டு, குறிப்பாகச்சொன்னால் ஒரு சாதாரண இந்துவுக்குத் தெரிந்த தமது சமயம் பற்றிய அறிவைவிட அதிகமாகக் கற்றுணர்ந்து கொண்டு, இந்து சமயத்தின் பெரும்கடலில் தாமாக வந்து கலந்து கொள்கின்றனர்.
இன்று விஞ்ஞான உலகின் முன்னேற்றம், சமய அறிவினைக் கேலி செய்தாலும், ஒரு வகையில் சில நன்மைகளையும் செய்துகொண்டுதான் இருக்கிறது. அதாவது கணனி மூலம் யோர்மன் நாட்டவர்கள் தமக்கு இந்து சமயத்தின் மீதுள்ள நாட்டத்தையும் எழும் சந்தேகங்களையும் கணனியில் உள்ள இணையத்தளங்களுடன் இணைந்து தமது அறிவைப் பெருக்கிக் கொள்கின்றனர்.
இப்படியாக யோர்மனியில் சுற்காட் நகரில் வாழ்ந்து வந்த Chrstla Seller என்பவர் (25.04.1955) தனக்கு இந்து சமயத்தில் உள்ள ஈடுபாடு காரணமாக சுற்காட் நகரத்தில் உள்ள ஆலயத்தில் பூஜைநேரம் போக மீதி நேரங்களில் தமிழ் இளைஞர்களின் மொழி பெயர்ப்புடன் சமய அறிவினை வளர்த்துக்கொண்டார். இவர் இணையத் தளத்தில் கற்றுக்கொண்டதற்கு இணங்க இவர் இந்து சமயத்திற்கு இந்து சமய முறைப்படி குருக்களின் பூஜையுடன் இந்து சமையியாக மாறிக்கொண்டார்.
இந்த வைபவம் சுற்காட்நகரில் ஸ்ரீ சக்தி விநாயகர் இந்துக் கோயிலில் ( Waiblinger Str.30- 70372 Stuttgart - Bad Canstatt) 10.07.04 இல் நடைபெற்றது. லண்டன் நகரில் இருந்து வருகைதந்த பிரபல குருக்கள் அவர்கள் இந்தப் பெண்ணுக்கு திரு மந்திரம் சொல்லி, முறைப்படி தீட்சை வழங்கி இந்துப் பெண்ணாக வழிசெய்தார்.
இவருக்கு வழங்கப்பட்ட இந்து சமயப்பெயர் அபிராமி யாகும். தற்போது ஸ்ரேலா என்ற பெயரைக் கூறினால் அபிராமி என்று தன்னை அழைக்கும்படி கூறுகின்றார்.
சாதாரணமாகச் செய்யும் பூஜைகளில் பிழைகள் இருந்தால் இனம் கண்டு, சமயத்தை முறையாக வளர்க்கப்பாடுபடுகின்றார்.
கௌரிவிரதம் நடைபெற்றவேளை அதன் மகத்துவத்தை கற்று இந்து சமயத்தவர்களுக்கே முன் மாதிரியானவராக நடந்துள்ளார். இதன் மூலம் தான் ஸ்ரேலா அல்ல இப்போது அபிராமி என்பதனை நிஜமாகவே காட்டிவருகின்றார்.
இவருடைய இந்து சமயப் பற்றுக்கு அதுகாட்டும் குடும்ப உறவுகளும், பாசங்களுமே காரணமாக அமைகின்றது.

**சத்தியா**


## மங்கள இசை



**திருமணவிழாக்களா!**
**பூப்புனிதநீராட்டுவைபவமா!**
**தமிழர் கலை பண்பாட்டு விழாக்களா!! எதுவானாலும் மங்கலகரமாக ஆரம்பித்துச் சிறப்பிக்க நாடுங்கள்**
**'தவில் இசைச்செல்வன்'**
**ஜெயக்குமாரன் (பாபு)**

Tel: 09831- 89 84 1-
Fax:09831-89 84 1
Handy-0172 77 43 901

K.R.Jeyakumaran(Babu)
Steinkreuz Str.63
91710 Gunzenhausen

# மூன்று தெய்வங்கள்

**பகீரதி சுதேந்திரன்** (யேர்மனி)

மானிடத்தாயின் பங்கு ஒரு உயிரின் வளர்ச்சியில் எப்படிச் சிறந்து விளங்குகின்றதோ அதைவிடப் பல மடங்கு லோகமாதா நமது ஆன்மவளர்ச்சிக்காகப் பாடுபடுகின்றார்.
இந்தப் பராசக்தியானவள் சிவனுக்கே மங்களத்தை அளிப்பவர் அல்லவா? சக்தி சிவனை விட்டுப் பிரிந்து விட்டால் சிவன் பயனற்றவர் என்கிறது ஸ்காந்தம்.
எல்லாசக்திகளுக்கும் ஆதிசக்தியாக விளங்குகின்ற அம்பிகையானவள் தன்னிடமிருந்து மூன்று குணங்கள் கொண்ட மூன்று வடிவங்களைத் தோற்றுவித்தார்.
மகாலக்குமி . மகாசரஸ்வதி. மகாகாளி என்கின்ற இவ்வடிவங்கள் ஒவ்வொன்றும் இரட்டை வடிவங்களாகத்தோன்றின.
மகாலட்சுமியிடமிருந்து பிரம்மாவும் லக்சுமியும் சிவப்பு வர்ணமுடைய வர்களாகவும். மகா சரஸ்வதியிடமிருந்து விஷ்ணுவும் பார்வதியும் நீலவர்ண முடையவர்களாகவும்,
காளியிடமிருந்து சிவனும். சரஸ்வதியும் வெள்ளை நிறத்துடனும் தோன்றினார்கள். இதனால்த்தான் லக்ஸ்சுமியும். பிரம்மாவும் தாமரை மலரில் அமர்ந்த தோற்றத்திலும், விஸ்ணுவும். பார்வதியும் சங்கு. சக்கரங்களுடன் நாராயணன். நாராயணியாகவும் . சிவனும்.சரஸ்வதியும் ஸ்படிக மாலைகளுடன் பொதுவான தட்சணாமூர்த்தி ரூபத்திலும், ஆலயங்களில் அருள்பாலித்து வருகின்றனர்.
சக்தியாகிய அம்பிகை கொடுமையே உருவான அசுரர்கள் பலரை போரிட்டு வென்று தேவர்களை காப்பாற்றியவளாகையால் எந்த நேரமும் தேவர்களால் வணங்கப்படுகின்றார். மனம் செம்மைப்படவும் நல்வாழ்க்கைப் பேறுகள் கிடைப்பதற்கும் அம்பிகையை சரண் அடைவதே சிறந்தது.
பண்டைக்காலப் போர்க்கடவுளாக பாலை வனத்தின் இறைவியாக கொற்றவை வழிபாடு செய்யப்பட்டுள்ளாள். இவரை தொல்காப்பியத்தில் மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. கொற்றம் அதாவது வெற்றி. அவ்வை உயர்ந்தவள். ஏனப் பிரித்துக்கொண்டால் போரில் வெற்றியைத் தருபவள் என்பது பொருள். கொற்றவையை போர்வீரர்களும். அரசர்களும் வணங்கினார்கள். திருமுருகாற்றுப் படையில் வெற்றிவேல் போர்க் கொற்றவை எனக்குறிப்பிடப்படுகின்றாள்.
இவரே காடுறை கடவுளாக பொருநர் ஆற்றுப் படையில் பேசப்படுபவர் ஆவர்.

**சிவத்தமிழ் குறுக்கெழுத்துப்போட்டி இல.2**

## சரியானவிடை எழுதியவர்கள்

Thuvaraha Ravi
Wacholder weg 14
73230 Kircheim-Teck

Mrs.S.Easwary.
Garten Str.1
71522 Backnang

Mrs.Saviththiri.Thevathas
Kolberger Str.22
13357 Berlin

Mrs.Rajeswary.Sivarajah
Angertaler Str.98
47249 Duisburg

Miss.T.Mansula
Durgapuram Magalir Illam
Tellippalai
Sri.Lanka

Miss.N.Sathiyaa
Durgapuram Magalir Illam
Tellippalai
Sri.Lanka

Miss.B.Subajini
Durgapuram Magalir Illam
Tellippalai
Sri.Lanka

## பரிசுபெறும் அதிஷ்டசாலிகள்

Miss.N.Sathiyaa
Durgapuram Magalir Illam
Tellippalai
Sri.Lanka

Miss.B.Subajini
Durgapuram Magalir Illam
Tellippalai
Sri.Lanka

Mrs.Rajeswary.Sivarajah
Angertaler Str.98
47249 Duisburg
Germany

**பரிசுகள் வழங்குபவர்**
ARO PRASI TRADE
Glashütten Platz 11
45549 Sprockhovel
Germany
உரிமையாளர்:
"சிவநெறிக்காவலர்"
நா.இரவீந்திரன்



## தங்கமகள்

ஈழம் எமக்கீந்த மாதரசி
வாழ வழிசொன்ன செயலரசி
நாளும் நமக்காய் எழும் உதயரசி
வாழ்க சிவத்தமிழாய் நம் சொல்லரசி

**ஜெயந்தி .அசோகன்**




**Drive Early -Drive Slowly- Drve Saftly .**

**மாதவி**

ஆசை!ஆசை! அது காற்றைவிட ஏன் ஒளியைவிட ஓசையைவிட வேகமானது. காலம் என்பது மெதுவாக நகர்வது. 60 செக்கன் ஒரு நிமிடம். 60 நிமிடம் ஒரு மணித்தியாலம். 24 மணித்தியாலம் ஒரு நாள். 364 நாட்கள் ஒரு வருடம். பார்தீர்களா? காலம் அசையும் கோலமும் வேகமும்.

இப்படி மெதுவாக அசையும் காலத்தை மிஞ்சி வேகமாக ஓடிக்கொண்டு இருக்கிறது ஆசை என்னும் தேர். ஆனால் அந்த வேகமான தேரை இந்த மெது வாக நகரும் காலம் ஒரு நாள் முந்திக்கொள்ளும்.

நேற்று நடந்ததுபோல் இருக்கிறது அந்த 30 வருடங் கள். எப்படிப் போனது என்று தெரியாது என்று தடு மாறுவோம். இப்போதுதான் அவளைக் கண்டு என் காதலைச் சொன்னதும்,அதற்கு அவள் நாணிக் கொண்டு நிலம்பார்த்ததும், இன்றுபோல் இருக்கும். ஆனால் இப்போ என் பேரப்பிள்ளைக்கு திருமணமாம் அதுவும் காதல் திருமணமாம். இப்போதுதான் புரிகிறது மெல்ல நகரும் காலம் விரைந்து செல்லும் ஆசைகளையும் முந்திச்செல்லும் என்று. எத்தனை ஆசைகள் எத்தனை கற்பனைகள். இதில் எத்தனை வீதம்தான் ஒருவரது வாழ்வில் நிறைவு பெறுகின்றது. இப்படி நிறைவு பெற்றாலும் அந்த நிறைவு பெற்ற இடத்தில் இருந்து இன்னும் ஒரு புதிய ஆசை தளிர்விட்டு முளைக்கிறதே!

எந்த ஆசையையும் முழுமையாக நிறைவு செய்யா மல் போவதற்கு பெயர்தான் வாழ்கையா? அதனைத் தான் கண்ணதாசன் கூறுகிறார். இது வேண்டும் என்று இதனைப் பிடிக்கச்சென்று, பின் அதனைவிட்டு, அது வேண்டும் என்று அதன் பின் ஓடி, இறுதியில் அதை யும் பிடிக்காமல் எதையுமே பிடிக்காமல் செல்வதற் குத்தான் வாழ்க்கை என்று பெயர்.

வாழ்க்கை நீர்க்குமிழி போன்றது. கண்மூடி விழிப்ப தற்குள் மெதுவாகச் செல்லும்காலம் விரைந்து சென்றுவிடும்.

எனவே நாம் எங்கள் கடமைகளை நாளை என்று கொள்ளாமல் இன்றே அதாவது இந்த விநாடியே தொடங்க வேண்டும். இறைவன் இருக்கிறானோ என்று ஒரு கேள்வி இளமையில் எவருக்கும் வரும். உடம்பில் இரத்த நாளங்கள் தடிப்புற்று, இரத்தம் செல்வதற்கு வழியின்றி தடுமாறும் வேளை மனம் தெளிவடைந்து வழிபிறக்கும். இறைவன்பால் அன்பு வளியும்.ஆனால் அப்போது நீங்கள் இறைவனை அடைய வேண்டியதூரம் அதிகமாக இருக்கும்.

இன்றே இளமையிலேயே பாதையை வகுத்துக் கொண்டு இறைவன் இருக்கிறானோ இல்லையோ என்ற எண்ணத்தைவிட்டு மனதை நல்வழியில் நேராக நகர்த்துங்கள். மெதுவாகச் சென்றாலும் நீங்கள் நிதானமாக அந்த இலக்கை அடையும் போது நிச்சயம் அங்கு ஆண்டவன் தெரிவார்.

ஒரு மரம் தான் பூத்து கனியவேண்டிய காலத்தில் கனிகிறது. ஒருநாள் ஒருமரம் கனிகிறகாலம் எல்லாம் நன்றாகக் கனிந்து, பழங்களை பறவைகளுக்கு விருந்து கொடுத்து முடித்திருந்தது. இப்போ மரம் கனிகள் இன்றி வெட்டையாக இருந்தது. அப்போது அடிமரத்தில் ஒரு நத்தை ஊர்ந்து நுனிமரத்தை நோக்கிவருவது பறவைகளுக்கு தெரிந்தது.

பறவைகள் அந்த நத்தையைப் பார்த்து. நத்தையாரே மரத்தின் நுனியில் பழங்கள் எல்லாம் முடிந்து விட்டது. பழக்காலமும் முடிந்துவிட்டது, நீ விணாக மேலே வந்து ஏமாந்து செல்லப்போகிறாய் என்று எச்சரித்தன.

நத்தையோ மெதுவாக ஊர்ந்து கொண்டு பறவை களைப் பார்த்துக் கூறியது.

“நான் மரத்தின் நுனியை அடையும் வேளை மரம் கனிகளுடன் தொங்கும் காலம் வந்துவிடும் என்றும். கனி தொடங்கும் வேளை புறப்பட்டால் கனிந்து முடிந்த பின்னரே நான் அங்குபோய்ச்சேர்வேன். எனவேதான் நேரத்தோடு ஆரம்பிக்க வேண்டும். இதனை ஆங்கிலத்தில் இப்படிக் கூறுவார்கள்.

Drive Early -Drive Slowly- Drve Saftly .

இதன் உட்பொருள் ஆன்மாவைச் சுட்டியல்லவா நிற்கிறது

**மெல்ல நகரும் நாட்கள் வேகமாகச் செல்லும் ஆசைகளையும் முந்திச் செல்லும்.**

**எங்கள் இணையத் தளத்தில் இணைந்து தங்கத் தாய் மண்ணை வலம் வாருங்கள்!**



# தேவி பணிபுரியும் சிவத்தமிழ்ச் செல்வி

தாயகத்தில் ஈழநாடு பத்திரிகையில் 07.01.87 ஆண்டு அன்னையின் 62 வது பிறந்ததினத்தில் வெளியான கட்டுரை

ஈழம்வாழ் சைவத்தமிழ் மக்களின் வழிபாட்டுப் பாரம்பரியம் பெற்றது தெல்லிப்பழை துர்க்கா தேவி அம்பாள் திருக்கோவில், சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பாக காசியில் இருந்து வந்த அம்பாள் உபாசகர் துர்க்கா யந்திரத்தைப் பிரதிஸ்டைசெய்து ஸ்தாபிக்கப்பெற்றது இவ் வாலயம். இவ்வாலயத் திருத்தொண்டில் ஈடுபட்டுழைத்த தர்மசிந்தனையாளர்கள், பரோபகாரர்கள் வரிசையில் முன்னணியில் திகழ்பவர் எங்கள் மதிப்பார்ந்த தலைவர் சிவத் தமிழ்ச் செல்வி அம்மையார் அவர்கள் ஈழத்துச் சித்தர் பரம்பரையில் முதன்மை பெற்ற கொழும்புத் துறை தவமுனிவர் ஸ்ரீ யோகர் சுவாமிகளின் ஆசிபெற்றது இத்தலம். இன்று பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் துயர் துடைத்து அருள்புரிகின்றார். அன்னை துர்க்காதேவி அம்பாள்.

அம்மையார் அவர்கள் ஏகமனதாக 1977 ம் ஆண்டு தைமாதம் 20 ம் திகதி தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்கள்

இவ்வாலயத்தின் வரலாற்றில் ஆலயத் தொண்டராகவும், நிர்வாகசபை உறுப்பினராகவும், தனாதிகாரியாகவும் பணியாற்றிய அம்மையார் அவர்களைத் தலைவர் பதவி தேடிவந்தது. அவர்களின் பேச்சு ஆற்றலாலும் சிறந்த சமய சொற்பொழிவாலும், சிந்தனை ஆற்றலாலும் பல்வேறு வகையான திருப்பணிகள் உருவாகின. அவை சமய சமூக, கல்வி, வைத்தியம் ஆகிய பணிகளாக பரிணமித்தன. 1978 ம் அண்டு அழகான சித்திரத்தேர்த் திருப்பணியும் 1981 ம் அண்டு ஆலய மகா கும்பாபிசேகமும் ,வானலாவும் இராஜகோபுரமும் 1981 வைகாசிமாதம் சைவசித்தாந்தப் பவளவிழா மகாநாடும், 1982 துர்க்கா புஷ்கரணி தீர்த்தக்கேணியும், அன்னைபூரணி மண்டபமும், அடியார்கள் மண்டபமும், பொங்கல் மடுவம் போன்றன எல்லாம் நிறைவு பெற்றன. இத்துடன் நின்றுவிடாது சமுதாயப் பணியாக 1982 இல் ஆதரவற்ற பெண்குழந்தைகளுக்கு துர்க்காபுரம் மகளிர் இல்லமும் அமைக்கப்பெற்றது நாம் செய்த தவப்பலனேயாம்.

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானவரலாற்றில் 4.3.85 திங்கள் இரவு ஏற்பட்ட கொள்ளை அசம்பாவிதம் அம்மாவின் வாழ்வில் ஓர் தாக்கத்தை ஏற்படுத்தியது இதனால் பலநாட்கள் நித்திரையற்ற இரவுகளாக மாறியது. தமது தர்மத்தில் ஏதாவது தவறுதல் உண்டா என்பது அவரின் ஆழ்ந்த சிந்தனையாக இருந்தது. ஆயினும் இவற்றிற்கு விடையளிக்குமுகமாக 23.05.1986 வெள்ளிக்கிழமை வைகாசிப் பூரணை நாளில் மாபெரும் அற்புதத்தை அம்பாள் காட்டி அமைதிபெறச் செய்தது அடியார்கள் அறிந்ததே.

அம்பாளின் தங்க நகைகள் திரும்பிய அற்புதம் பெரும் எழுச்சியும், திருப்புமுனையையும் அடியார்களுக்கும் எமக்கும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு அற்புதம் காட்டிய அம்பாள், அம்மையார் அவர்களை அவர்களின் நல்ல திட்டங்களை நிறைவேற்ற கருணைபுரிவது இந்த பத்து ஆண்டுகளில் நிகழ்ந்த திருப்பணிகளிலும் மேலாக பல திருப்பணிகளை நிறைவேற்ற பல்லாண்டு பல்லாண்டு காலம் அம்மையார் வாழ எல்லாம்வல்ல துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம். எங்கள் பிறந்ததின வாழ்த்தினைத் தெரிவிக்கின்றோம்

சு.சிவவாகீசர்
க. தணிகாசலம்

# அன்னையே உம்மை வாழ்த்துகிறோம்

வெற்றிமணியின் 100வது இதழில் அறக் கொடைவிழா என்ற தலைப்பில் தனது 79வது பிறந்ததினத்தில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அன்னையின் புனித பணி என்ற விபரம் கண்டேன். நீண்ட காலங்களுக்குப்பின் தாய் மண்ணில் கடந்த காலங்களை நினைவில் மீட்டித்தந்தது. இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன் எனது ஊரான கரம்பொன் நகரில் அமைந்திருக்கும் மேலைக் கரம்பொன் முருகமூர்த்தி ஆலயத்தில் ஆடிமாதத்திருவிழா நடைபெறுவதுண்டு. கொடியேற்றம் முதல் திருக்கல்யாணம் வரை 11 நாட்களும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிரசங்கம் சிறப்பு நிகழ்சியாக இடம்பெறும் அன்னையின் சொற்பொழிவைத் தவறாது கேட்க வேண்டும் என்பதில் எம் ஊரவர் காட்டும் ஆர்வம் சொற்பொழிவில் திருவிழாவின் பலன் கிடைத்தது போல் மனநிறைவு கொள்ள வைக்கும். ஒரே அன்னை பற்றிய பேச்சுக்கள் அனைவர் வீடுகளிலும். 1981ம் ஆண்டு துர்க்கை அம்மன் ஆலயத்திற்குச் சென்றபோது அங்கு அன்னையின் ஆலய நிர்வாகம் கண்டுவியந்தோம். ஈழத்து மண்ணில் ஒரு அன்னை தெரேசாவா என எண்ணத்தோன்றும் எங்கள் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் முத்துவிழாக்காணும் நேரம் அவரை வாழ்த்தும் பேறுபெற்றதில் மகிழ்கின்றோம்.

அன்புடன்
**சாந்திகுமரன். யேர்மனி - பிரேமன்**
கரம்பொன் அமரர் இ.மாணிக்கம் அவர்களின் பெறாமகள்)

**இந்த மண்ணின் சுகந்தம்**

# தெல்லிப்பழை துர்க்கை அம்மன்

**கவிச்சித்திரா சுகந்தினி சுதர்சன்**



தெல்லிநகர் அம்மனே
முல்லை மலரே
முக்காலமும் நீ பொழியும்
வற்றாத கருணையினால்
கற்றாளம் காடுகளும்
உன் பெயரை
கவிகளென பாடினயே

மனத்திலே நூறுமுறை
உன் நினைப்பு எழும்
கணத்திலே,
உன் உருவம்
ஓவியமாகி பின் காவியமாகும்
கிணற்று நீரிலும்
உன் பிம்பம் நிறைந்து நிற்க
குடத்திலே நீரெடுத்து
உன்னடிக்கு ஊற்றுவோமே

செவ்வாய் என்றதும்
உன் செவ்வாய் நோக்கிட
மெய், வாய் அனைத்திலும்
உன் மேனியின் நினைப்புகொண்டு
ஒய்யாரமாய்,
உன்னை நாடிவரும்
பக்தர்கள் குறை தீர்ப்பவளே
எங்கள் உயிரும் நீதானம்மா


சிவத்தமிழ்ச் செல்வியும்
துர்கா துரந்தரியும் - வற்றாத
கலா நிதியும்
எக்காலமும் உன்னருகில்
அகலாதிருக்க வேண்டுமம்மா




## சைவத் தமிழ் ஆய்வு நூலகம்

சிவத்தமிழ்ச்செல்வியின் பவளவிழாவின்போது உருவாக்கப்பட்ட சிவத்தமிழ்ச்செல்வி சைவத் தமிழ் ஆய்வு நூலகத்தின் ஒரு தோற்றம். இது வெறும் கற்களால் ஆன கோபுரம் அல்ல. இலட்சக் கணக்கான சைவநூல்களினால் உருவாக்கப்பட்ட இனிய கோபுரம். இக்கோபுரம் சிவத்தமிழ்ச் செல்வியின் புகழைக் காலம் காலமாக எடுத்தியம் பவல்லது.

## ஆலய உற்சவம் 2004



"செஞ்சொற்செல்வர்" ஆறு.திருமுருகன் உரையாற்றுகின்றார்.



# துர்க்கா துரந்தரி வாழ்க பல்லாண்டு

குளப்பிட்டி. க. அருமைநாயகம்

தங்கத் தமிழ் தரணியில் தழைத் தோங்க
மங்காது சைவ மணம் கமழ
சிங்கத் தமிழர் சிறப்பொடு சேர்ந்து
சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தனர்

காலத்தால் அந்நியர் நம்நாட்டினுள் புகுந்து
வாழவிடாது தமிழை வாட்டி வதைத்தனர்
மாளாது தமிழைச் சைவத்தைக் காக்க
காலங் காலமாய் காவலர் தோன்றினர்

நாட்டில் ஆங்கில ஆட்சியில் அன்று சைவ
ஆட்கள் அநேகர் மதம் மாறினர்
வாட்டம் கொண்ட நல்லைநகர் நாவலர்
காட்டினார் ஆர்வம் காத்தார் தமிழைச் சைவத்தை

நல்லைநகர் நாவலர்க்குப் பின்னாலே நற்பணியாற்ற
இல்லையா ஒருவரென தமிழன்னை தவித்துநிற்க
நல்லூர் முருகன் சிவத்தமிழ்ச் செல்வியை
அல்லல் களைய அனுப்பி வைத்தாரே

தங்க மனதுடைய தங்கம்மா அம்மையார்- தமிழ்
மங்களம் பொங்க மனதாரப் பணிசெய்து
எங்கள் சைவத்தை ஏற்றமுற வைத்து
திங்களாய் தமிழ் வானில் திகழ்கின்றார் இன்று

அம்மா ஆற்றிய அரும்பணி யதனால்
அம்பாள் ஆலயம் உயர்ந்து வளர்ந்தது
நம்பிக்கை கொண்டு சமூகப் பணியாற்றி
அம்பாள் அருளால் மகளிர் இல்லமதை அமைத்தார்.

பேருக்கும் புகழுக்கும் பலரும் பாடுபட -போரால்
ஆருமற்று அவதியுறு பிள்ளைகட்குத் தானே தாயாகி
சீரும் சிறப்புடன் சமய சமூகப் பணிசெய்து - தெல்லி
யூருக்கே புகழ்சேர்க்கும் துர்க்கா துரந்தரி வாழ்க பல்லாண்டு

# மிருகமும் பறவையும்

*தமிழறிஞர்*
*கி. ஆ. பெ. விசுவநாதம்*



எறும்பின்
சுறுசுறுப்பும்
எருதின்
உழைப்பும்
நரியின்
தந்திரமும்
நாயின்
விசுவாசமும்
கழுதையின்
பொறுமையும்
காகத்தின்
கூட்டுறவும்
புலியின்
வீரமும்
புறாவின்
ஒழுக்கமும்
சிங்கத்தின்
நடையும்
யானையின்
அறிவும்
மானின்
வாழ்வும்
மக்களுக்குத் தேவை


## தாயகத்தில் இருந்து



ஆசிரியர்
செஞ்சொற் செல்வர்
திரு. ஆறு. திருமுருகன்

உதவி ஆசிரியர்
சைவத்திரு. கா. சிவபாலன்

# அருள் ஒளி

மாதாந்த சஞ்சிகை

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை -இலங்கை

# பெண்ணியம் என்பது பேசப்படும் பொருள் அல்ல

### கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்

வெற்றிமணிக்குள் இருந்து ஒலித்த அருள்மணிதான் சிவத்தமிழ். இன்று சிவத்தமிழ் சிவத்தமிழ்ச் செல்வியின் சிறப்பு மலராக விரிவதனால் அதன் மணம் உலகெங்கும் பரவுகிறது.

இன்று எனது தந்தை மறைந்து 25 ஆண்டுகள் நிறைந்த பொழுதில் அவர் என் கைளில் தந்த கலையும், வெற்றிமணியும் ,முன்னையர் நற்பணி களை மட்டுமன்றி இன்றைய நாளில் நற்பணிகளைப் புரிபவர்களையும் சிறந்தோங்க ஒலிக்கிறது.

பெண்ணியம் என்பது பேசப்படும் பொருள் அல்ல. அல்லது பட்டிமன்றத்திற்கான பகடைக்காய்களும் அல்ல. பெண்ணியம் என்பது வாழ்வுக்குரியது. இதனை தாய்மண்ணில் காட்டிய புண்ணிய நதிகளில் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியவர்களையும் ஒருவராகக் காண்கின்றேன்.

பேச்சுக்கள் எழுத்துக்கள் படைப்புக்கள் அனைத் துமே செயல் என்னும் மையினால் எழுதப்பட வேண்டும்.

"கூட்டாக உன்னால் நகரமுடியவில்லை என்றால் நின்ற இடத்தில் ஆவது நின்று ஒளிவீசு"

என்கிறது ஒரு கிரேக்கப் பழமொழி. உலகை வலம் வந்த ஒரு நதி இன்று துர்கையம்மன் சன்னிதியில் அமர்ந்துகொண்டு கிரேக்கப் பழமொழியினை பொன் மொழியாக்கும் பொன்னாகப்! பெண்ணாக ஒளி வீசுகிறது..

எனது முதலாவது சிறுகதை 19 வயதில் வெளியானது. அந்த வயது பட்டாம்பூச்சி வயது. சிற கடிக்க வானமே போதாது என அடம்பிடிக்கும் வயது. ஆனால்.. நான் கொண்ட பிடிப்பு தமிழ்மேலும் கலைமேலும் இருந்தது அன்று என்பதை எனது முதற் கதையான "ஒரே ஒரு தொய்வம்" என்கின்ற குறுநாவல் காட்டியது.

இக்குறுநாவல் 1973ம் ஆண்டு சன்மார்கசபையில் வெளியிடப்பட்டது. கவிஞர் வி.கந்தவனம் கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை,இரசிகமணி,கலாகேசரி ஆ.தம்பித்துரை, பொன்.பாலகுமார். இவர்களுடன் சிவத்தமிழ்ச்செல்வி அவர்களும் கலந்துகொண்டார். அன்று கலாகேசரியிடம் இருந்து முதற்பிரதியினை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியவர்கள் பெற்றுக் கொண்டு ஆசியுரை வழங்கினார். இற்றைக்கு 32 ஆண்டுகளின் பின் துர்காதுரந்தரியின் முத்துவிழா சிறப்பு மலராக சிவத்தமிழ்கொண்டு வணங்குவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.



கிளிநொச்சியில் அறக்கொடைவிழா - 2004

ஆசிரியபணியில் தன் ஆரம்ப சேவையைத் தொடங் கிய அவர்கள் மாணவர்களின் தேவைகளை நன்கு உணர்ந்தவர். எனவே தான் கொண்ட அநுபவங்களின் விழைவாக மாணவர்களுக்கு உதவும் திட்டத்தினை உருவாக்கி தனது ஒவ்வொரு பிறந்ததினங்களிலும் அறக்கொடை நிகழ்வாக மாணவர்களுக்கு உதவி வருகின்றார். சென்ற 2004ம் ஆண்டு கிளிநொச்சி சென்று அங்கு தன் பணியினைச் செய்து "என்கடன் பணி செய்துகிடப்பதே" என்பதனைக் காட்டியுள்ளார்..



கிளிநொச்சி அரசாங்க அதிபருடன் சிவத்தமிழ்ச்செல்வி

கோயிலைச் சுற்றி பூந்தோட்டம் உள்ளது போன்று பலதோட்டங்களை உருவாக்கி தினமும் அவற்றிற்கு அன்பு நீர்பாச்சுகின்றார். மகளீர் இல்லம், முதியோர் இல்லம், சைவ ஆய்வு நூலகம், சிவபூமி, என பல வர்ணப்பூக்கள் கொத்துக் கொத்தாக பூத்துச் சிரிக்கின்றன. இந்தச்சிரிப்பினை துர்க்கா தேவியின் இதழோரப் புன்னகைக்கு ஈடாக எண்ணி மகிழ்கின்றார்.

ஒருவர் அருகில் இல்லாதபோதும் அவரை வாழ்த்தும் பண்பு தமிழனின் பண்பு. சென்ற ஆண்டு அவரை நேரில் பார்த்துவிட்டு சன்மார்கசபை பிரமுகர் திரு ம. சபாரத்தினம் அவர்களுடன் கோயில் பின் புறத்தில் அமைத்துக் கொண்டிருந்த விருந்தினர் விடுதியினை பார்க்கச்சென்றேன். அன்று செவ்வாய்க்கிழமை வழமையான தனது உரையை சிவத்தமிழ்செல்வி ஆற்றிக்கொண்டு இருந்தார். வெற்றிமணி என்கின்ற ஓசை அவரது வெண்கலக்குரலில் ஒலிபெருக்கியில் கேட்டு நின்றேன். அவர் வெற்றிமணி புலம்பெயர்ந்த நாட்டில் வெளிவருவது பற்றியும், அது ஆற்றும் சேவைபற்றியும் தன்னுரையில் குறிப்பிட்டு என் வரவையும் எடுத்துக்கூறினார். நான் அவ்விடத்தில் இல்லை என்பதனைத் தெரிந்து கொண்டும் ஒரு தமிழிச்சியாக அதாவது தமிழ்ப் பண்புள்ளவராக நடந்து கொண்டதன் மூலம் தொலைவில் இருந்தாலும் நான் அவர் உள்ளத்தில் அண்மையில் உள்ளேன் என்பதனைப் புரிந்துகொண்டேன். எனது தங்கை திருமதி.தயாநிதி மோகன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் 1978ம் ஆண்டு மார்கழிமாதம் 9ம் திகதி யாழ் வீரசிங்கம் மண்ட பத்தில் இடம் பெற்றது. அன்று தலைமைதாங்கி நிகழ்வைச்சிறப்பித்தவர் சிவத்தமிழ்ச்செல்வி.

.அவர்களது முத்து விழாவினை யேர்மனி, கனடா, இங்கிலாந்து, தாயகம் எங்கும் சிவத்தமிழ் விழாவாக எடுத்து சிறப்பு மலரையும் வெளியிடுகின்றோம். யான் பெற்ற பேறுகளில் பெரும் பேறல்லவா இப்பேறு.

**கலைகள் யாவும் முடிவில் கடவுளின் பெருமையையே விளக்குகின்றன**

# அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி

சமூகஜோதி
ஆன்மீகத்தென்றல்
தம்பி. புவனேந்திரன்


Röntgen Str 6,_58239 Schwerte,Germany

இலங்கையின் யாழ்பாண மாவட்டத்தின் நான்கு பெரும் பிரிவுகளில் ஒன்றான வலிகாமத்தில் வலி-வடக்கு பிரதேசம் பல் துறைகளிலும் சிறப்புற்று விளங்குகின்றது. கல்வி, ஆன்மீகம், இலக்கியம், நுண் கலை, விளையாட்டு எனப் பல் துறைகளிலும் முதன்மைபெற்று விளங்கும் பிரதேசமாக இது திகழ்கின்றது. இப் பிரதேசத்தின் மணிமுடியாய் திகழ்வது தெல்லிப்பழைக் கிராமம். இன்று தெல்லிப்பழை என்றதும் அனைவர் மனங்களிலும் நினைவுக்கு வருவது தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானமும் அதன் உயிர்நாடியாகத் திகழும் சிவத்தமிழ் செல்வி, கலாநிதி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியுமாகும். வெறும் கிரியைகளோடு மட்டும் கலந்து நின்ற சைவ, ஆன்மீக மரபை மாற்றியமைத்து ஆலயங்களைச் சமூக, பொருளாதார மேம்பாட்டு மையங்களாக மாறவைத்த சாதனை யாளராக அன்னை அவர்கள் திகழ்கிறார்கள். இன்று பல ஆலயங்களும், சைவ சமய நிறுவனங்களும் சமூகப்பணிகளை ஆற்ற மூலவராக விளங்குபவரும் அன்னையே ஆவர்.

தெல்லிப்பழையின் அயல் கிராமமான குரும்பசிட்டியை சேர்ந்தநான், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என்று அழைக்கப்பட்ட காலத்திலிருந்து கலாநிதி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி என அழைக்கப்படும்வரை அவருடைய பரிமாண வளர்ச்சியை நேரில் கண்ட அனுபவங்கள் கணக்கிலடங்கா.

1960ம் ஆண்டுகளில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை புரிந்த காலத்திலேயே அன்னை தன்னை ஆன்மீகத் துறையில் இணைத்துக்கொண்டார். குறிப்பாகச் சமயப் பிரசங்கம் ஆற்றுவதில் அவருக்கு நிகர் அவரே. கணீர் என்ற இனிமையான குரல், அறுத்து உறுத்த உற்சரிப்பு, இலகுவான நடையோடு கூடிய சமய பிரசங்கங்கள் அனைத்து மக்களையும் கவர்ந்தது. எனது இளமைக் காலத்தில் அன்னையின் சமயப் பிரசங்கங்களை கேட்டு மகிழ்ந்துள்ளேன். அன்னையின் பாதம் படாத இடங்களே இலங்கையில் கிடையாது. தமிழர் வாழும் பகுதிகளிலுள்ள கிராமங்கள் மூலை முடுக்குகள் எங்கும் சென்று பிரசங்கங்கள் செய்தார். அன்னையார் மலேசியா, சிங்கப்பூர், பெரிய பிரித்தானியா போன்ற பல தமிழர்கள் வாழும் நாடுகளுக்கு பல தடவைகள் சென்று அங்குள்ள சைவ ஆலயங்களிலும், சமய நிறுவனங்களிலும் சமயப்பிரசங்கங்கள் நிகழ்த்தினார். இந்திய தமிழ்நாட்டில் நடந்த ஆன்மீக மகா நாடுகளிலும் அன்னையின் வெண்கல குரல் ஒலித்து நமது சமயத்திற்கும் தமிழிற்கும் மகுடம் சூட்டின.

இவ்வாறு இழமைக்காலத்திலேயே சமயப் பிரசங்கங்கள் போன்ற ஆன்மீகத் துறையில் தன்னை இணைத்த அன்னை ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின் தனது வதிவிடத்திற்கு மிக அண்மையில் இருந்து துர்க்காதேவி ஆலயத்தின் வழர்ச்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். அன்னையார் ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் தலைவராக இருந்த காலத்தில் ஆலயம் பிரமாண்டமான வளர்ச்சியைக்கண்டது, ஆலயத்தை அணிசெய்ய பல மண்டபங்கள், அவற்றை இணைத்து அமைந்த மூடிய உட்கொட்டகைகள், இராயகோபுரம், சித்திரத்தேர், அன்னதான மடங்கள், நிர்வாக அலுவலகங்கள் எனப் பலவும் அமைந்தன.



தம்பி. புவனேந்திரன்

இத்துடன் முறையான ஆகம முறைப்படி அமைந்த கிரிகைகள், காலம் தவறாத பூஜைகள் யாவும் உரிய நேரத்தில் தொடங்கி உரிய நேரத்தில் நிறைவேற்றுதல் என்பனவும் நடத்தினார். அன்னை அவர்களின் தலைமையில் ஒழுங்கு, கட்டுப்பாடு, சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு என்பவற்றை கொண்டு திகழ்ந்த ஆலயம் ஏனைய ஆலயங்களுக்கு முன் மாதிரியாகவும் அமைந்தது. யாழ் மாவட்டத்து பல ஆலயங்களும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தை முன்மாதிரியாகக் கொண்டு குறித்த நேரங்களில் பூஜைகளை ஆரம்பித்தன. ஆலய வருமானத்தில் ஒரு பகுதியை மனித நேயப் பணிகளுக்கு ஒதுக்குதல் உட்பட பல பொதுப் பணிகளில் பின்பற்றினார் அன்னையார்.

அன்னையின் மனிதநேயப் பணிகளுக்கு மகுடம் வைத்தால் போல் அமைவது துர்காதேவி தேவஸ்தானத்தில் அமையப் பெற்ற மகளிர் இல்லமும், முதியோர் இல்லமுமாகும். மகளிர் இல்லத்தில் ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கு இடமளித்து, அவர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததோடு கல்வி வசதி, நுண்கலைப்பயிற்சிகள் போன்றவற்றை வழங்கினார். அன்னையின் நிர்வாகத்தில் பலர் பல்கலைக்கழக அனுமதியைக்கூட இவ் இல்லத்திலிருந்து பெற்றனர் எனும் செய்தி பெரு உவகை கொள்ள வைக்கிறது. இதேபோன்று வயோதிப காலத்தில் பராமரிக்க யாரும் இன்றி வரும் முதியோர்களுக்கு அன்னை அமைத்த ஆதரவில்லம் ஒரு நிழல் மரமாகும்.

அன்னையார் தனது பிறந்தநாளில் பல நற்பணிகளையும் தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்த நாள் நிதியம் ஊடாக மேற் கொண்டுவருகிறார். குறிப்பாகச் சிறந்த பெறுபேறு களைப் பெற்று பல்கலைக்கழக அனுமதி பெற்றவர் களுக்கு புலமைப் பரிசில்களும் வழங்கிவருகிறார். அன்னையாரின் இம் முன்மாதிரியான பணிகளைக் கண்ட யாழ் பல்கலைக் கழகம் இவருக்குக் கலாநிதி கௌரவ விருது வழங்கிக் கௌரவித்தது.

மேன் மேலும் அன்னையார் பணி ஓங்க எல்லாம் வல்ல யோமனி ஸ்ரீ கனக துர்க்கா அம்பாள் அருள் பாலிப்பாராக.

**மற்றவர்களிடம் எதைக் குற்றம் என்று**
**பார்க்கிறோமோ**
**அதுவே நமக்கு ஏற்பட்டால்**
**சோதனை**
**என்று அழைக்கின்றோம்.**

**- எமர்ஸன்**

சிவத் தமிழுக்கு
அருள்சேர்க்கும்
அன்பர்க்கு எமது
நன்றிகள்


**Orientalische Textilien & Schmuck**

Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Tel: 0231/162377
Fax: 49.0231/147836

**A.P. INTERNET & TELECAFE**

Tel: 0231-95 65 416 Fax: 0231- 95 65 403

Lange Str.98
44137 Dortmund
அ.பதியமரன் (ராஜன்)

**Asiat Center & Call Center**

*Asian Grocery & international Calls*
**Tel: 02406 - 666851 Fax: 02406 - 666852**
Damm Str.15
52134 Herzogenrath
Aachen உரிமையாளர்.S.செல்வரட்ணம்

**Travel AIR**

**Wuppertal**
**Reisebüro GmbH**




Luisen Str.46 , 42103 Wuppertal
Tel: 0202/4936921 , Fax: 0202/2443106
Tel: 0202/24431 04 - 05
Handy:0173-2850638

**ARO PRASI TRADE**

Tel: 02339/6478
Fax: 02339/121855
Glashüttenplatz 11
45549 Sprockhovel

**M.G.Internatonal Call Shop**

Tel:0231 20 64 471 Handy:0171 249 1719
**Rheinische str.72**
**44137 Dortmund**

**Little India**

*Textile & Jewellery*
**Tel 02131 / 27 36 92 Fax:02131/738784**
**Meerer Hof - 22**
**41462 Neuss**

**ASIA BAZAR**

உரிமையாளர்:பா.கணேஷ்

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-308292

**பிருந்தா**

Ludwig str. 92
70197 Stuttgart
**Silk House**

*Tel :* 0711/ 61 58 976
*Fax:* 0711-61 42 663
*Handy :*01703344059

**TELE AGENT EASY CALL SHOP**
**SUPERMARKT & KIOSK**

**Kumaran's**
Tel: (0421) 59 66 236
Tel: (0421) 57 96 938
Fax: (0421) 52 44 931
Mobil: 0173 2367117

**Langemarckstr.100**
**28199 Bremen / Germany**


**LONDON TEX**

LONDON TEX
**Rheinische str.64**
**44137 Dortmund**
Tel:0231-1891220 Handy: 0173/38 55 717

**யேர்மனியில் 11 ஆண்டுகள் தொடர்ந்து வெளிவரும்**
**வண்ணத் தமிழ் பத்திரிகை**

# வெற்றிமணி

பாரினில் உயிர் வாழக்
காற்றே நீ இலவசம்
தரணியில் தமிழ் வளர
வெற்றிமணி நீ இலவசம்



ஸ்தாபகர்
அமரர் **மு.க.சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாசாலை)


*Chief Editor:*
*Dr.M.K.S.Sivakumaran B.F.A.*

Postfach 2765
58477 Lüdenscheid
Germany
Tel&Fax:
02351/45 88 62
e-mail: vettimaniy@hotmail.com


QB 830

பிரதம ஆசிரியர்
**மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.

தாயகத்தில் ஆரம்பம் 1950

# கனீன் எலக்ரோனிக்ஸ்

# KANEEN ELECTRONICS

## கலைவிழாக்களா!

டீஜிட்டல் ஒளி, ஒலி வாங்கிமூலம்...தமிழ் தொலைக்காட்சி, தமிழ் வானொலி நிகழ்ச்சி...தெளிவாகப் பார்க்கக்... கேட்க நாடுங்கள்.
உபகரணங்களை தவணை முறையில் (வங்கி மூலம்) எம்மால் பெற்றுத் தரப்படும்.
கலைவிழாக்களை கலையம்சத்துடன் படமாக்க நாடுங்கள்.

தீபம்

## இரண்டு வருட தீபம் சந்தா அட்டை எட்டு யூரோவுடன் ஆரம்பிக்கலாம்!

இரண்டு வருட தீபம் அட்டைக்கு
ஒரே தவணையில் பணம் செலுத்தாது.
முதல் எட்டு யூரோவினை வங்கியில் கட்டி நீங்கள் தீபம்
தொலைக்காட்சியினைப் பார்க்க ஆரம்பிக்கலாம்.
பின்னர் (23X19) மாதம் மாதம் 19 யூரோவினை வங்கியில் செலுத்தி தினமும்
பார்த்து மகிழலாம்.

**முக்கிய குறிப்பு:**

இம்முறையில் 2 வருட தீபம் சந்தா அட்டைகளைப் பெறவிரும்புவோர்
யேர்மனியில் வதிவிட அனுமதி உடையவர்களாகவும், தொழில் புரிபவராகவும்
இருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு
எம்முடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

**KANEEN ELECTRONICS**
Schevenhofer Weg 24,
42111 Wuppertal

Tel: 0205 3423 740 Handy: 0172/ 29 31 2 66 Fax: 0205 3423 741